Registered as a Newspaper

நிரு
ரியூசன் சென்ரர்
கோண்டாவில்.
89 A/L
PAPER CLASS
Phy — சௌந்த
Tu - Thu - 4.00
Che — செல்வா
Sat - Sun - 2.30
Bot — பாலா
Sat - Sun - 3.30
Zoo — ஞானம்
Sat - Sun 8.00

# உதயன்

விலை ரூ 2. 50

NIRU TUITION CENTRE
Kondavil.
A/L 89
PAPER CLASS
Eco சின்னத்தம்பி
சனி. ஞா. - 5 00 p.m.
Acc - மரியதாஸ்
திங் புதன் - 6 00 a.m.
Com தேவா
செவ். வியா 6 30 a.m.
DAY CLASS - 89
காலை 7 00 10 00 வரை
நடைபெறுகின்றன.

சுடர்- 4 விபவ ஆடு மாசி மீ 17 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 றஜப் பிறை 21 (28-02-1989) UTHAYAN -A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்-72

# பொலிஸ் முறைப்பாடுகளை பதிவதற்குப் புதிய ஏற்பாடு

## வசிக்கும் பகுதியில் மட்டுமன்றி வேறு இடத்திலும் முறையிடலாம்

கொழும்பு, பெப்ரவரி, 28

பொது மக்கள் பொலீஸில் முறைப்பாடு செய்வதற்குப் புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தப் புதிய ஏற்பாட்டின் பிரகாரம் பொது மக்கள் தாம் வசிக்கும் பகுதியில் மட்டுந்தான் பொலீஸில் முறைப்பாடு செய்யலாம் என்ற நிலை மாற்றப்பட்டுள்ளது. நாட்டின் எந்தப் பகுதியிலும் உள்ள பொலீஸ் நிலையத்தில் தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்து கொள்ளலாம்.

பொதுமக்கள் நாட்டின் எப்பகுதியிலும் உள்ள பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடுகளை செய்யலாம் என்ற புதிய ஏற்பாடு சம்பந்தமாக பொலீஸ் மா அதிபர் சகல பொலீஸ் அதிபர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

சம்பந்தப்பட்ட பொதுமகன் தான் வாழும் பகுதியில் உள்ள பொலீஸ் நிலையத்தில்தான் முறைப்பாட்டைச் செய்ய வேண்டும் என்ற நியந்தனை நீக்கப்பட்டுவிட்டது.

நிர்வாக எல்லை என்ற கட்டுப்பாட்டை நீக்கி, நாட்டின் எந்தப் பகுதியிலும் பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி பொலீஸ் அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். (அ எ)

## பல்கலைக்கழகங்கள் வியாழன் ஆரம்பமாகா
### ஒத்திவைக்க மாநாட்டில் முடிவு

கொழும்பு, பெப். 28

தென்னிலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படமாட்டா.

நேற்று நடந்த மாநாடு ஒன்றில் இது சம்பந்தமான முடிவு எடுக்கப்பட்டது.

உயர்கல்வி, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீது மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

இப்போதைய சூழ்நிலையில் பல்கலைக்கழகங்களை உடனடியாகத் திறப்பதை ஒத்திப்போடுவதென மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

பல்கலைக்கழகங்களின் செனட் சபைகள், மாணவர் சபைகள் ஆகியவற்றுடன் பேச்சுக்களை நடத்தி ஒரே சமயத்தில் பல்கலைக்கழகங்களைத் திறப்பது குறித்து தமது கருத்துக்களைத் தெரிவிப்பதாக உபவேந்தர்கள் மாநாட்டில் தெரிவித்தனர். (எ)

## திருமலையிலிருந்து யாழ்வந்த பயணிகள் பஸ் தீக்கிரை

யாழ்ப்பாணம், பெப் 28

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த பயணிகள் பஸ் ஒன்று ஹொரவப்பொத்தானைக்கு அண்மையில் தீயிட்டுக்கொளுத்தப்பட்டது.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9 மணி அளவில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை டிப்போவுக்குச் சொந்தமான மேற்படி பஸ் ஹொரவப்பொத்தானைக்குச் சமீபமாக வந்துகொண்டிருந்த பொழுது ஆயுதந்தாங்கிய கோஷ்டியினரால் வழிமறிக்கப்பட்டது.

பயணிகள் அனைவரும் பயமுறுத்தி இறக்கப்பட்டதன் பின்னர் பஸ் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

பயணிகள் வேறுவாகனங்கள் மூலம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்கள்.

இதேவேளை இப்பகுதியில் லொறி ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டதாகக்கூறப்பட்டது (ஒ-10)

## வெலிஓயா கொலைகளுக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என விடுதலைப் புலிகள் மறுப்பு

யாழ்ப்பாணம், பெப் 28

வெலிஓயாப் பகுதியில் சிங்களக் கிராமத்தில் சடந்த வாரம் நடந்த கொலைகளுக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

வெலிஓயா என்னும் திட்டத்தின் கீழ் தமிழீழ மண்ணில் சிங்களக் குடியேற்றம் நடக்கும் பகுதிகளில் அண்மையில் சிங்களப் பொது மக்களை நாம் கொலை செய்ததாக ஸ்ரீலங்கா அரசு குற்றம் சாட்டியுள்ளது.

எமது இயக்கத்தைக் களங்கப்படுத்தும் நோக்குடன் சொல்லப்பட்ட இக்குற்றச்சாட்டில் எதுவித உண்மையுமில்லை. எமக்கும் இக்கொலைகளுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை—என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (அ)

## மீன்பிடி உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட 16 மீனவக் குடும்பங்களுக்கு 78 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் இன்று காரைநகரில் வைத்து உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்படும்.

மீன்பிடிக் கூட்டுத் (8 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தன் தொழிற்சாலை மீள இயங்க நடவடிக்கை

கொழும்பு பெப் 28

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைக்க கைத்தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இத்தகவலை வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு அ. வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சர் ரணிலுடன் மேலும் பேச்சுக்கள் இவ்வாரம் நடத்தவிருப்பதாக திரு. வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

முதலமைச்சர் மேலும் சொன்னதாவது:-

இது விஷயத்தில் அமைச்சர் அக்கறை காட்டிவருகிறார். எல்லா உதவிகளும் அளிப்பதாக அவர் உறுதியளித்திருக்கிறார்.

பருத்தித்துறை, வல்லிபுரம் பகுதியில் சண்ணடித் தொழிற்சாலை ஒன்றை அமைக்க அமைச்சரின் உதவியை நாடியிருக்கிறேன்.

யாழ் மக்களின் நீண்டகாலக் கனவு இக் கண்ணடித் தொழிற்சாலையாகும்.

மட்டக்களப்பு, இலுப்படிச்சேனை ஓட்டுத் தொழிற்சாலையை மீண்டும் திறக்கும் வாய்ப்புக்கள் பற்றியும் அமைச்சர் ஆராய்வார்.

—இப்படி முதலமைச்சர் சொன்னார். (உ எ)

## மகாசிவராத்திரி 6ஆம் திகதி: கேதீச்சரத்தில் கூடும் பக்தருக்கு பாதுகாப்பு யார்?

மன்னார், பெப். 28

சரித்திரப் புகழ்பெற்ற திருக்கேதீச்சர ஆலயத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவிருக்கும் மகாசிவராத்திரி விரதத்தை முன்னிட்டு இவ்வாலயத்தில் கூடும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது குறித்து இன்னமும் முடிவாகவில்லை என்று திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையினர் உதயனுக்குத் தெரிவித்தனர்.

இந்திய அமைதிப் படையினரா அல்லது ஸ்ரீலங்கா இராணுவத்தினரா பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவார்கள் என்று இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

இம்முறை நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் திருக்கேதீஸ்வரத்தில் கூடுவர் என எதிர்பார்க்கப்படுவதால் அவர்களுக்கான தங்குமிட வசதிகளை அங்குள்ள மடங் (8 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசியில் குறுக்கீடு காரணம் அதுவா...?

யாழ்ப்பாணம், பெப் 28

யாழ். - கொழும்பு நேரடித் தொலைபேசி சேவையில் அடிக்கடி குறுக்கீடுகளும் தெளிவின்மைகளும் ஏற்படுவதற்குக் காரணம் என்ன?

மின்சாரத்தைச் சட்டவிரோத இணைப்புச் செய்து பெற்றுக்கொள்வது போல், யாழ்.- கொழும்பு தொலைபேசிச் சேவையிலும் சட்டவிரோதமாக இணைப்புகள் பொருத்தப்பட்டுள்ளனவா? தொலைத் தொடர்புப் பகுதியின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு ஒரு சிலர் சட்டவிரோத இணைப்புகளைச் செய்து பணம் சம்பாதிக்கிறார்களா?

அடிக்கடி நேரடித் தொலைபேசிச் சேவை சீர்குலைந்து போவதற்கு இந்தச் சட்டவிரோதச் செயலும் ஒரு பிரதான காரணியாக இருக்கலாமென்று தொலைபேசி பொருத்தப்பட்டுள்ள பல அரசாங்கத் திணைக்களங்களின் அதிகாரிகள் சந்தேகிக்கிறார்கள்.

தாங்கள் கொழும்புடன் உரையாடிக்கொண்டிருக்கும் போது தமிழில் கேட்கும் குறுக்கீட்டுச் சம்பாஷணைகள் சட்டவிரோதத் தொடர்பினால் தான் உண்டாக வேண்டும் என அவர்கள் நம்புகிறார்கள்!

தொலைத்தொடர்பு திணைக்களம் இது விடயத்தில் உரிய விதத்தில் செயலில் இறங்கி, உண்மை நிலையைக் கண்டறிந்து தெளிவுபடுத்துமா என்றும் அந்த அரசாங்கத் திணைக்கள அதிகாரிகள் அங்கலாய்க்கிறார்கள்! (அ-10)

## கொல்வின் காலமானார்

கொழும்பு, பெப் 28

பழம்பெரும் அரசியல் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நேற்றுக்காலை காலமானார்.

அவருக்கு வயது 82

தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்த சமயம் அவருக்கு மரணம் சம்பவித்தது.

இறுதிக் கிரியைகள் வருகிற வியாழக்கிழமை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

சுதந்திரச் சதுக்கத்தில் இறுதிச்சடங்கு இடம்பெறும்.

அவரது பூதவுடல் முதலாம் திகதி ல ச ச. தலைமைக்காரியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

லங்கா சமசமாஜக் கட்சியை 1935 இல் ஸ்தாபித்த தலைவர்களில் கொல்வினும் ஒருவர்.

கட்சியின் முதலாவது தலைவராகவும் இவர் (8 ஆம் பக்கம் பார்க்க)

## அ'புரவில் ஹர்த்தால்

கொழும்பு, பெப் 28

அனுராதபுரம் மாவட்டத்தில் ஜே. வி. பி.யினரின் அழைப்பை ஏற்று நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அப்பாவிப் பொதுமக்கள் அரசப்படையினரால் கொல்லப்படுவதை ஆட்சேபித்தே ஹர்த்தால் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

போக்குவரத்துக்கள் தடைப்பட்டன. கடைகள், அரச அலுவலகங்கள் மூடப்பட்டன.

படையினரின் வற்புறுத்தலுக்கு இணங்க சில சடைகள் திறக்கப்பட்டன; சில பஸ்களும் சேவையில் ஈடுபட்டன.

அனுராதபுரத்தில் கடந்த வாரத்தில் மட்டும் 43 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆட்கள் காணாமற் போவதும் பின்னர் சட (8 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க ஆதரவாளர்கள் இருவர் கொலை

கொழும்பு, பெப் 28

மாத்தறையில் நேற்று ஜே. வி. பி. தீவிரவாதிகள், ஐ. தே. க. ஆதரவாளர்கள் இருவரைச் சுட்டுக்கொன்றதாக அறிவிக்கப்பட்டது. (ஓ)

## படை அதிகாரி உயிரிழப்பு

கொழும்பு பெப் 28

அம்பாறை மாவட்டத்தில் ரோந்து சென்ற படையினர் மீது நேற்று தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் படை அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். படையினர் ஐவர் காயமடைந்தனர். (ஓ)

## 17 பேருக்கு ஆசிரிய நியமனம்

யாழ்ப்பாணம் பெப், 28

சேவைக்கால முன்பயிற்சியை முடித்துக்கொண்ட ஐந்தாவது தொகுதி ஆசிரியர்களில் 17 பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

17 ஆசிரியர்களும் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் நியமிக்கப் படவுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ள போதிலும் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு நேற்றுவரை வந்து சேரவில்லை (ஒ-10)

### மக்கள் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு
## தேசிய கவுன்சிலில் இணைய ஈ. பி. ஆர். எல். எவ். 'வேண்டுகோள்

யாழ்ப்பாணம், பெப். 28

தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதற்காக அமைக்கப்படவுள்ள தேசியக் கவுன்சிலில் சேருமாறு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஏனைய தமிழர் அமைப்புக்களுக்கும், பொது ஸ்தாபனங்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக ஈ பி. ஆர். எல். எவ் இயக்கத்தின் செயலாளர் நாயகம் திரு. க. பத்மநாபா பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை வருமாறு:-

தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அனைத்து அமைப்புகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய தான தேசிய கவுன்சில் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் ஈடுபட்டுள்ளோம்:

கடந்த காலங்களில் எமது மக்கள் அனுபவித்த துன்பங்களையும் துயரங்களையும் இழப்புக்களையும் நிவிர்த்தி செய்யும் வகையில் இன்று [8 ஆம் பக்கம் பார்க்க]

### சுபநேரம்

28-02-1989
மாசி-17
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10 59 முதல் 12.29 வரை
ராகுகாலம்:
03.29 முதல் 04 59 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### தலாவைக்குச் சமீபமாக
## ரயில் தடம்புரண்டது; யாழ்தேவி சேவை ரத்து!

யாழ்தேவி ரயில் சேவை இன்று நடத்தப்படமாட்டாது

தலாவைக்கும் சிராவஸ்திபுரவுக்கும் இடையே ரயில் ஒன்று தடம்புரண்டதனால் இச்சேவை ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக இன்று காலை 5-45 க்கு கோட்டையில் இருந்து புறப்படும் யாழ்தேவி ரயில், பிற்பகல் 2-15 மணிக்கு வவுனியாவுக்குப் புறப்படும் ரயில் [illegible] என்று ரயில்வே கட்டுப்பாட்டு [illegible] (ஓ எ)

## முச்சந்தி முனி



உவை பல்கலைக்கழகங்களை திறந்து பாடம் தொடங்கிறதுக்கு இடையிலை மாணவர்கள் கிழவராகி விடுவினம் போலை இருக்குதே......!

## யாழ்-காங்கேசன் ரயில்பாதை திருத்தப்படும்
### போக்குவரத்து அமைச்சர் தகவல்

கொழும்பு, பெப் 28

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை ரயில் பாதையை திருத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் விஜயபால மெண்டிஸ் தெரிவித்தார்.

இதற்குத்தேவையான சிலிப்பர் கட்டைகள் மற்றும் நிதி வசதிகளை கொடுத்துதவ இந்தியா முன்வந்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

18 கிலோமீற்றர் நீளமான இப்பாதைபோக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லை.

சிலீப்பர் கட்டைகள் அகற்றப்பட்டுள்ளன

இப்படி அமைச்சர் மெண்டிஸ் தெரிவித்தார். (ஓ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

பாவித்த தளபாடங்கள், மேசை, கட்டில், Show case அலுமாரி, கண்ணாடி மேசை, ஹோல் செற், விருந்தை செற், சம்பளம், மணிக்கூடு, Record player, சாப்பாட்டு மேசை, கதிரைகள், Fan மற்றும் பல பொருள்களும் உடன் விற்பனைக்கு உண்டு V. சிவராம், 69, அம்மன் ரோட், கந்தர்மடம் (9596)

Gas Cooker Celling Fan Show Case புத்தக அலுமாரி, கபேட், கண்ணாடி மேசை T. V. Stand செற்றி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு, 262 பிரதான வீதி, யாழ்ப்பாணம். (Dr தருமலிங்கம் வாட் முன் பாக] (9597)

நல்ல இன வளர்ப்பு மீன்கள் (Gold Fish, S- Tail, Mollie etc மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு 'இரத்தின வாசா' கருவேலடிலேன், (பழைய புகையிரத வீதி), கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (9595)

பாவித்த அலுமாரி, கபேட், செற்றி வசத்தின், புத்தக அலுமாரி, சாப்பாட்டு மேசை, கதிரைகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு, 14/2, பிளட்சர் ஒழுங்கை, சுண்டுக்குளி. (9618)

C. D 185 9 ஸ்ரீ Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கு. சதானந்தன் ஆஸ்பத்திரி முன் லேன், நாயன்மார் கட்டு: (9593)

நல்ல பாவிப்புள்ள சிசில் டிபிறிசர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: ஒசாகா றேடேஸ், மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்; (C/1694)

## விற்பனைக்குண்டு

Frigen gas குளிர் சாதனப் பெட்டிகளுக்கு நிரப்பும் வாயு Gestetner, Roneo. Machine, (Electric Hand Operated) Photostat Machines, Service Station Equipments "Creemers' Aircompressure 600 CC மற்றும் மேடை மேசைத் தராசுகள், படிகள் விற்பனைக்குண்டு சாமுவேல் சன்ஸ் அன்கோ லிமிட் யாழ்ப்பாணம். (C/1709

## அச்சகம் விற்பனைக்கு

சிலிண்டர் மெஷின் உன்னத நிலையிலுள்ளது. புறாவ் மெஷின், புதிதம் புதிய அச்செழுத்துக்கள், புதிய கேஸ்கள் மற்றும் அச்சக உபகரணங்கள் புதியவை மொத்தமாக விற்பனைக்கு உண்டு. (ரூபா 2½ இலட்சம் வரையில்] விபரங்களுக்கு நேரில் வரவும். மாயவர் மல்லாகம். [9619]

## முச்சக்கர சைக்கிள் விற்பனை

புதிய மூன்று சில்லு பாரம் ஏற்றும் சைக்கிள் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு; புஸ்பா அன்கோ, 128, மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம் (C/1705)

## London O/L English June 89

Practice classes begin on4.3 89. Sat) Sun/Wed Time 5 6 p.m Contact S.B Iyar. 12, Wyman Road, Nallur. (9559-

## Spoken English

தொழில் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கும் சர்வகலாசாலை மாணவர்களின் வசதியை முன்னிட்டு புதிய பிரிவு Spoken English வகுப்புக்கள். ஆரம்பம்;- 2- 3- 89. செவ்வாய் வியாழன் நாட்களில் நேரம் மாலை 5 - 6 30 மணி வரை. S. B Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (9558)

## விற்பனைக்கு

பாவித்த தளபாடங்கள் கட்டில்கள், Divon Hall Sets அலுமாரிகள், Dressing Table [Three Mirrors] மேசைகள் Kitcoen பொருள்கள் எவர் சில்வர். Brass பொருள்கள் கிடாரங்கள். பெட்டகம் Linen Almarah Screen Dinner Sets Chess of Drawers, Easy Chair திருமதி த. சங்கரப்பிள்ளை, கனகசபை ரோட், மானிப்பாய். (9601)

## ஆங்கில/சிங்கள கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் பொது, தனிப்பட்ட சிறு குழுக்கள், வீட்டு விஜயம் ((House Visit] ஆகியவற்றிற்கான வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும்: I. E. T கல்வி ஸ்தாபனம், 11 B ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். (விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல் மாடி) [9342]

## NEW CITY TRADERS

சகல விதமான T V டெக், ரேடியோ, அன்ரனா பூஸ்ரர், வயர்பைப் செற் T D K. Maxell Audio Video கசற் வீட்டுக்குத் தேவையான மணிக்கூடு, சிறுவர் விளையாட்டுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்: New City Traders 135 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். C/ 1522)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பிறவுண் சேவற் குஞ்சுகள், கறுப்புசேவற்குஞ்சுகள், பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் (பிரம்படி லேன்) கொக்குவில். (9545)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

பிறிமா இன ஒரு நாள்பு றொயிலர் குஞ்சுகள் 28 - 2 - 1989 இல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. S M காட்வெயர், 11/6 ஸ்ரான்லி வீதி. திருமகள் ஸ்ரோஸ் சிவலிங்கப் புளியடி. C S K பாம் சென்ரர். சங்கேரி - நல்லூர் வீதி. கிருஷ்ணா பாம் சென்ரர், திருநெல்வேலி. (9554)

## ஒருநாள் கோழிக் குஞ்சு

சகல இன பேடு சேவல் புரொயிலர் R, I R (பிலிமத்) கறுப்புப் புள்ளி சேவல் குஞ்சுகள் 1 - 3 - 89 புதன் அன்று விநியோகிக்கப்படும். தொடர்ந்து ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும். விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க K. சக்தி, சம்பியன் ஒழுங்கை. கொக்குவில் கிழக்கு S T R & சன் மாவுக் கடை, திருநெல்வேலி சந்தி. (9613)


## பேச்சி அம்மன் ஆலயம் புனரமைப்பு

குருநகர், பெப் 28 யாழ். வண்வட மேற்கு நாவலடி வீதி ஸ்ரீபேச்சி அம்மன் தேவஸ்தானம் இரண்டு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப் படுகின்றது.

முன்மண்டபம், மூலஸ்தானம், கோபுரம்மடைப் பள்ளி என்பன அராலியூர் மேஸ்திரி பா. பன்னீர்ச்செல்வம் குழுவினரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

புனரமைப்பு வேலைகள் பூர்த்தியானதும் ஸ்ரீ பேச்சியம்மன் திருவுருவம் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் விரைவில் நடைபெற உள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர். (இ 51]

## சிறிமாவுக்கு பாதுகாப்பு வழங்கிய பொலீஸ் அதிகாரிகள் இருவருக்கு கட்டாய லீவு

நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பாதுகாப்பு அதிகாரிகளாகக் கடமையாற்றிய இரண்டு பொலீஸ் அதிகாரிகள் கட்டாய லீவில் அனுப்பப்பட்டனர்.

பொதுத் தேர்தலின் போது இந்த இரண்டு அதிகாரிகளும் நடந்து கொண்ட முறை பற்றி ஐ.தே.க அரசியல்வாதிகள் சமர்ப்பித்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட இருவரில ஒருவர் சிரேஷ்ட பொலீஸ் அதிபர் ஆவார். (ஒ - எ)

## கிளிநொச்சியில் பறவைகளால் பயிர் அழியும் ஆபத்து

வட்டக்கச்சி, பெப் 28 கிளிநொச்சியில் 'சிறகை' என்னும் ஒருவகை பறவைகளினால் நெற்பயிர்கள் அழிகின்றன

அறுவடைக்குத் தயாராகி உள்ள நெற்கதிர்களை இந்தப் பறவைகள் அலகினால் கொத்திச் சேதப்படுத்துகின்றன.

தற்போதைய அசாதாரண நிலைமை காரணமாக வெளி இடங்களில் இருந்து அறுவடைக்கு கூலியாட்கள் வருவதிலும் தாமதம் இருந்து வருகிறது.

விவசாயிகள் தங்கள் வயல்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இரணைமடு திட்ட ஊரியான் உப குழுத் தலைவர் திரு. எம். கந்தசாமி கேட்டுள்ளார். (ச 163)

## கான்டன் யோசனையை ஐ.தே.க ஆதரிக்காது

### அமைச்சர் கருத்து

கொழும்பு, பெப் 28 முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பித்துள்ள கான்டன் அமைக்கும் யோசனையை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்காது.

வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன முன்கண்டவாறு சொன்னார்;

இந்திய - இலங்கை உடன்படிக்கையையே நாம் சரிவரப் பின்பற்றுவோம். ஜனாதிபதி பிரேமதாஸ குறிக்கும் திகதி வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு நிரந்தரமானதாக இருக்க வேண்டுமா என்ற சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

கான்டன் முறை நாட்டைத் துண்டாடும் தமிழர் தங்கள் பிரதேசத்தையும் முஸ்லிம் தங்கள் பிரதேசத்தையும் ஆள அது வழி வகுக்கும்.

இப்படி திரு. விஜயரத்ன சொன்னார். [எ]

## சிறுத்தீவு புனித லூர்த்து மாதா உற்சவம் இம்முறையும் இல்லை

குருநகர், பெப். 28 சிறுத்தீவு. புனித லூர்த்து மாதா ஆலய உற்சவம் இம் முறையும் நடைபெற மாட்டாதெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சிறுத்திவு புனித லூர்த்துமாதா ஆலய உற்சவம் வருடந்தோறும் பெப்ரவரி மாதக் கடைசி வாரம் நடைபெறுவது வழக்கம்

சிறுத்தீவு. குருநகர் இறங்குதுறைக்கு தெற்கே மண்டைதீவுக்கு இடையில் தனியாக இருக்கும் சின்னஞ் சிறியதீவு என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக உற்சவங்கள் எதுவும் நடைபெறவில்லை.

மண்டைதீவு, மினிமுகாம், இந்திய அமைதிப்படையின் குருநகர் 'ஜெட்டி' பாதுகாப்பு அரண் என்பன நிறுவப்பட்ட பின்பு சிறுத்தீவுக்குச் செல்வதை மீனவர்களும் பக்தர்களும் நிறுத்தியுள்ளனர் (இ - 51)

## இராசராசன் பரிசு

யாழ்ப்பாணம் பெப் 28 தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் வழங்கும் இராசராசன் பரிசு இம்முறையும் நாவல், கவிதை, நாடகம் கலையழகுடைய உரைநடை ஆகியவற்றுக்கு வழங்கப் படவிருக்கிறது.

இப்பரிசுப் போட்டியில் இலங்கையரும் பங்கு பற்றலாம்.

பங்குபற்றுவோரின் படைப்புக்களுக்குப் பரிந்துரை எழுதுவோர் அதற்குரிய படிவங்களை தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும்-

பரிந்துரை பெறும் இறுதி நாள் 10. 03 89 என்றும்—

இவை பற்றிய மேலதிக விவரங்களைத் தன்னிடம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ஆ வேலுப்பிள்ளை உதயனுக்குத் தெரிவித்தார்.

பரிசு பெறுவோருக்கு ஒரு லட்சத்து ஒரு ரூபா [illegible] பத்திர


# தரமான கலர்ப்படப் பிரதிகள்

★ அதிகுறைந்த கட்டணத்தில்
★ மிகக் குறுகிய காலத்தில்

கலர்ப்படச் சுருள் கழுவுதல் முற்றிலும் இலவசம்

நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்தல்

3 முதல் 5 நாட்களில் விநியோகம்



ஷப்ருவை நாடுங்கள்

★ ஷப்ரு

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண்: 22073

## University of Jaffna TENDER NOTICE

The date for collecting tender forms for the extension of cooking area at the Main Canteen. Thirunelvely has been extended until 03-03-1989 at 3 00 p m

The perfected tender should be sent to reach the Works Engineer on or before 09-03-1989 at 10 00 a m.

Tenderers are advised not to wait until last minute and no further extension will be granted

Actg. Registrar,
University of Jaffna.

(C/1618)

கலர் புகைப்படங்களை குறைந்த செலவில் குறுகிய காலத்தில் PROCESSING AND PRINTING செய்து நயமடைய நாடுங்கள்!

கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்.

# கொம்பியூட்டர் பயிற்சி

Diploma in Data Processing and Computer Programming Course

Basic ★ Advanced Basic ★ Cobol

Languages இற்கான
★ புதிய பிரிவுகள் ★

ஆரம்பம்: 5-3-89

(9-00 a.m) காலம்: 2 1/2 மாதம்

சேரும் போது செலுத்தும் கட்டணம்: Rs 400/-

I B M SUPER/XT, I B M COMPATIBLE, APPLE LASER, SHARP, COMMODORE, TEXAS போன்ற பல தரப்பட்ட கொம்பியூட்டர்களில் யாழ் நகரில் வேறெங்குமில்லாதவாறு மிகத் தரமான முறையில் பயிற்சியளிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றது.

★ வெளிநாட்டு, உள்நாட்டு வேலை வாய்ப்புகளுக்கு திறமைச் சான்றிதழ் மூலம் சிபார்சுகளைப் பெற்று பல மாணவர்கள் கடந்த காலங்களில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர் என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றோம்

★ உங்கள் பெயர்களை 3-3-89க்கு முன் பதிவு செய்வதன் மூலம் விருப்பத் திற்கேற்ற பிரிவுகளில் சேர்ந்து கொள்ளலாம்.

IDP Computer Centre,
342, K. K. S Road,
JAFFNA.

● மல்லாகம் கிளையிலும் சில பிரிவுகள் ஆரம்பமாகும்.

(9660)

# உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

★ COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE

பயிற்சிக் காலம்: 2 மாதம் ஆரம்பம். 3-3-89

(திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்)

கட்டணம்: ரூபா 950/- இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி (I. B. M COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிக்கப்பட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பதிவு செய்யவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 2 - 3 - 89




UNIKCO COMPUTER CENTRE

No 5, மின்சார நிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உப தபாற் கந்தோர் அருகாமை)

(C/1661)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பெருந்தொகை கடன், ஓவர்டிராப்ட் வழங்குதல் உட்பட

# கூடுதல் அதிகாரங்களுடன்

# வலய அலுவலகங்கள்

## யாழ்ப்பாணத்திலும், திருமலையிலும் இலங்கை வங்கி நிறுவும்

யாழ்ப்பாணம், பெப். 28

இலங்கை வங்கியின் தலைமை அலுவலகம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வலய அலுவலகங்களை (Zonal Offices) நிறுவ இருக்கிறது.

வடமாகாணத்துக்கான வலய அலுவலகம் யாழ்ப்பாணத்திலும், கிழக்கு மாகாணத்துக்கான வலய அலுவலகம் திருகோணமலையிலும் அமைக்கப்படவிருக்கின்றன.

வடக்கு, கிழக்குப் பகுதிகளைச்சேர்ந்த வாடிக்கையாளர்களுக்குக் கூடுதல் வசதிகளையும், சலுகைகளையும் வழங்கும் விதமாகவே இந்த வலய அலுவலகங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

தற்போது மாவட்ட அலுவலகங்களுக்குப் பதிலாக இந்த வலய அலுவலகங்கள் அமைக்கப்படும்.

மாவட்ட அலுவலகங்கள் பிரிவு அலுவலகங்களாக (Range Offices) மாற்றியமைக்கப்படும்.

வாடிக்கையாளர்களுக்கு நிதித் துறையில் கூடுதல் வசதிகளையும் சலுகைகளையும் அளிப்பதற்கு வசதியாக வலய அலுவலகங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படும்.

வாடிக்கையாளர்களுக்குப் பெருந்தொகையான பணத்தைக் கடனாகவும், 'ஓவர் டிராப்ட்' வசதியுடனும் வழங்குவதற்கு தற்போது வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள இலங்கை வங்கியில் மாவட்ட அலுவலகங்கள் கொழும்புத் தலைமை அலுவலகத்தின் அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது.

ஆனால் வலய அலுவலகங்கள் அமைக்கப்பட்டதும் இப்படியான விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டிய அவசியம் இருக்காது.

வலய அலுவலகங்களே இந்த நிதிக்கொடுப்பனவுகளுக்கான அனுமதியை வழங்குவதற்கு அதிகாரம் பெற்றிருக்கும்.

இலங்கை வங்கியின் தலைமையலுவலகத்தைச் சேர்ந்த உதவிப் பொது முகாமையாளர் ஒருவர் இந்த வலய அலுவலகங்களுக்குப் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக இருப்பார். (இ-ஐ)

## நெடுந்தீவு தவிர ஏனைய உ.அ.அதிபர் பிரிவுகளில் ஐ.நா உதவியுடன் வீடுகள்

மாவிட்டபுரம், பெப் 28

வன்செயல்களினால் தமது வீடுகளை இழந்தவர்களுக்கும், அகதிகளாக இந்தியா சென்று தாயகம் திரும்பியுள்ள அகதிகள் குடும்பங்களுக்கும் வழங்குவதற்கென நூறு வீடுகளை இவ்வருடம் அமைத்துக் கொடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அகதிகளுக்கான வீடமைப்புத்திட்டத்தின் மூலம் கட்ட வேலையாக இவை நிர்மாணிக்கப்பட உள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பன்னிரெண்டிலும் வீடுகள் நிர்மாணிக்கப்பட உள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை 20 வீடுகள் கரவெட்டி 15 வீடுகள், கோப்பாய் 15 வீடுகள், நல்லூர் 12 வீடுகள், சண்டிலிப்பாய் 9 வீடுகள், உடுவில் 8 வீடுகள், தெல்லிப்பளை 6 வீடுகள், ஊர்காவற்றுறை 5 வீடுகள், சாவகச்சேரி 4 வீடுகள், சங்கானை 3 வீடுகள் யாழ்ப்பாணம் 2 வீடுகள் வேலணை 1 வீடு.

இந்த வீடுகளை அமைக்கும் பணி இம்மாதம் ஆரம்பிக்கப்படும். (இ-90)

## சம்பந்தம் இல்லை என்கிறது ஈ.என்.டி.எல்.எவ்

கிளிநொச்சியில் வெளியன்று இடம்பெற்ற இரு இளைஞர்களின் கொலைகளுக்கும் ஈ.என்.டி.எல்.எவ். விற்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்று மேற்படி இயக்கத்தின் வவுனியா அலுவலகப் பேச்சாளரான திரு. பாலா தெரிவித்தார்.

இத்தகைய கொலைகளை வன்மையாகக் கண்டிப்பதுடன், அர்த்தமற்ற கொலைகள் எதுவித நன்மையும் பயக்கப் போவதில்லை எனவும் அவர் கூறினார் (ஓ-164)

## நெடுந்தீவில் கிராம சேவை அலுவலர்பிரிவுகள்

ஜனாதிபதியின் வறுமை ஒழிப்புத் திட்டத்துக்கமைய நெடுந்தீவில் புதிதாக மேலும் மூன்று கிராமசேவை அலுவலர் பிரிவுகள் உருவாகும் எனக் கூறப்படுகிறது.

தற்போது நான்கு கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன.

புதிதாக ஏற்படுத்தப்படவிருக்கும் மூன்று பிரிவுகளுடன் மொத்தம் ஏழு கிராமசேவகர் பிரிவுகள் இங்கு அமையும்.

ஒவ்வொரு பிரிவும் இரண்டு வட்டாரங்களை உள்ளடக்கியதாக இருக்கும் எனத் தெரிகிறது.

நெடுந்தீவில் மொத்தம் பதினைந்து வட்டாரங்கள் உள்ளன. (ச-111)

## வெளியூர் மீனவரின் பிரச்சினை இல்லை

நெடுந்தீவு, பெப் 28

நெடுந்தீவில் வழமை போல் இம்முறை வெளியிடங்களைச் சேர்ந்த மீனவர்கள் தொழில் நிமித்தம் வாடிகளை அமைக்கவில்லை.

உள்ளூர் மீனவரின் ஆட்சேபனை பெரும் அளவில் இருந்ததே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

முன்னர் வெளியூர் மீனவர்கள் தங்கியிருந்த பகுதிகளில் உள்ளூர் மீனவர்கள் பெருமளவில் வாடிகளை அமைத்துத் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.


RALEIGH
THE RALEIGH NOTTINGHAM ENGLAND

**லிசோ என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்.**
இலங்கையில் RALEIGHஇன் ஏக விநியோகஸ்தர்கள்

வடமாகாணத்தில்

**ஒவ்பீஸ் இக்குயூப்மென்ட் லிமிட்.**
(OFFICE EQUIPMENT Ltd)
இல. 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(மனோகராச் சந்திக்கு அருகாமையில்)

என்னும் நிறுவனத்தைத் தங்கள் ஏக விநியோகஸ்தர்களாக நியமித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றார்கள்.


★ RALEIGH BICYCLES
- தரம் நிபுணத்துவத்தின் சிறந்த பெயர்
- உலகம் பூராவும் நம்பிக்கையான பெயர்
- சிறந்ததைச் செய்யும் ஒரே சைக்கிள்

Miller Dynamo Lighting Sets-12 Volts
சகல அம்சங்களிலும் சம்பியனாகத் திகழும் சைக்கிள்
Grand Champion Bicycles
(SPORTS & GENTS)

இவற்றை நீங்கள் பெற்றுக்கொள்ள இன்றே OFFICE EQUIPMENT Ltd. இன் புதிய காட்சியறைக்கு விரையுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள் :
**லிசோ என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்.**
பொது கனரகப் பொருள் வர்த்தகர்கள்
(கொழும்புக் கச்சேரிக்கு எதிரில்)
133&133 1/4, டாம் வீதி, கொழும்பு-12.
தொலைபேசி : 32161 (C/1718)





**இலங்கை வங்கியின் பிள்ளைகளின் சேமிப்புத் திட்டத்தில் இன்றே சேருங்கள்.**

**உங்கள் பிள்ளையின் வளமான வருங்காலத்திற்கு வழிகோலுங்கள்!**

உங்கள் பிள்ளைக்கு வருங்காலத்தில் ஏற்படக்கூடிய பணத்தேவைகளை அது நம்பிக்கையுடன் எதிர்நோக்க இப்போதிருந்தே நீங்கள் வழிசெய்வது உங்கள் முக்கிய கடமையாகும்.

கவர்ச்சிகரமான வட்டியை வழங்கும், இலங்கை வங்கியின் பிள்ளைகளின் சேமிப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி உங்கள் பிள்ளையின் பெயரில் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

இந்தத் திட்டத்தின் மூலம், பலவருடச் சேமிப்பும் அத்துடன் சேரும் வட்டியும் ...

இலங்கை வங்கியில், ஆகக் குறைந்த வைப்புத்தொகையாகிய ரூ.-100/- ஐச் செலுத்தி மிக இலகுவில் கணக்கை ஆரம்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு, இன்றே உங்களுக்கு அண்மையிலுள்ள இலங்கை வங்கிக் கிளை முகாமையாளரைச் சந்தியுங்கள்.

சந்தைப்படுத்தல் முகாமையாளர்
22-வது மாடி ஜனாதிபதி மாவத்தை
கொழும்பு-1

**இலங்கை வங்கி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90 சதவீத

# உடற்கல்வி ஆசிரியருக்கான விண்ணப்பங்கள் நிராகரிப்பு

## கிளிநொச்சி - வவுனியா மாவட்ட நிலைமைகுறித்துபணிப்பாளர் தகவல்

தாளையடி பெப் 28

"கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களிலிருந்து உடற்கல்வி ஆசிரியர்கள் பதவிக்கு விண்ணப்பித்தவர்களில் 90 சத வீதமானவர்கள் நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, கிளிநொச்சி பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. சி. சுந்தரலிங்கம் கிளிநொச்சி மாவட்ட உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றும் போது இத்தகவலைத் தெரிவித்தார்.

கிளிநொச்சி உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி எஸ். சூரியமூர்த்தி தலைமையில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் கருத்தரங்கு நடைபெற்றது.

பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு சி. சுந்தரலிங்கம் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:

கடந்த காலங்களில் நாட்டில் காணப்பட்ட பதற்ற நிலைகாரணமாக மாவட்ட விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படவில்லை.

இதனால் உடற்கல்வி ஆசிரியர்களுக்கான விண்ணப்பத்தில் கோரப்பட்டிருந்த மாவட்ட தேசிய மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளின் சான்றிதழ்களை பெற்றிருக்காததினால் விண்ணப்பித்தவர்களில் 90 சதவீதமானவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் நிலையில் உள்ளன.

இப்படி அவர் கூறினார்,

வைபவத்தில் கல்வி அதிகாரி, திரு. எஸ். வேலாயுதம், உருத்திரபுரம் கொத்தணி அதிபர் திரு. பொன். சபாபதி ஆகியோரும் உரையாற்றினார்கள், திரு. எஸ், தர்மபாலன் நன்றி தெரிவித்து உரையாற்றினார். (க-144)

### ஜூனில் மேலும்துருப்புகள் இந்தியா திருப்பும்

கொழும்பு, பெப் 28

நிலைமை திருந்துகிறது. குறிப்பாக கிழக்கில் இருந்து வருகிற ஜூன் மாத முடிவில் மேலும் பல இந்தியத் துருப்புகள் தாயகம் திரும்பும்.

வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின முன்கண்டவாறு தெரிவித்தார் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஒ-எ)

### சீநோரில் வைபவம்

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் காரியாலயத்தினால் வடபகுதி அகதிகளுக்கு வழங்கப்பட இருக்கும் மீன்பிடி உபகரண அன்பளிப்பு வைபவம் இன்று காலை 10 00 மணி அளவில் காரை நகர் சீநோரில் இடம்பெறுகிறது. [இ]

## வவுனியா முகாம்களில் சோதனைகள் தளர்வு

வவுனியா, பெப் 28

வவுனியாவில் உள்ள இந்திய அமைதிப்படை சோதனை முகாம்களில் சோதனைகள் தளர்த்தப்பட்டுள்ளன வாகனங்களில், சைக்கிள்களில் இறங்காமலே பயணஞ் செய்ய அனுமதிக்கப்படுகின்றது.

இத் தடை முகாம்களில் இந்திய அமைதிப் படையினரும், இலங்கைப் பொலிசாரும் தொடர்ந்து நிலைகொண்டுள்ள போதிலும் தொல்லைகள் எதுவுமில்லை,

இதனிடையில் வவுனியா ரயில் நிலைய தடை முகாமிலிருந்தவர்கள் விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

அத்துடன் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக காலை 6மணி தொடக்கம் மாலை 6 மணி வரையில் அமுலில் இருந்த ஊரடங்கு உத்தரவு நாளொன்றிற்கு இரண்டு மணித்தியாலங்கள் தளர்த்தப்பட்டு மாலை 7 மணி முதல் காலை 5 மணி வரை அமுல் படுத்தப்படுகின்றது

முன்னதாகக் கடந்த புதனன்று ஈ பி. ஆர். எல். எவ், ரெலோ, ஈ என். டி எல் எவ். இயக்கப் பிரதிநிதிகள், அரச உயரதிகாரிகள், வங்கி முகாமையாளர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், பொது மக்களின் பிரமுகர்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடிய இந்தியப் படையின் வன்னிப் பிராந்திய மேஜர் ஜெனரல் மாலிக், சிவில் நிர்வாகம், சட்டம், ஒழுங்கு என்பன நல்ல முறையில் பேணப்படுவதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

ஊரடங்கு உத்தரவில் மாற்றம் ஏற்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஓ-164)

## மேலும் 5 ஆயிரம் பேர்

கொழும்பு பெப் 28

இலங்கை இராணுவத்திற்கு மேலும் 5 ஆயிரம் பேரை திரட்ட தளபதி ஹமில்டன் வனிகசிங்க பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தைக் கோரியிருக்கிறார்.

தொண்டர் படையிலும் இரண்டு ரெஜிமண்டுகளை புதிதாக அமைக்கவும் இராணுவத் தளபதி திட்டமிட்டிருக்கிறார். (இ-எ)

## கலையைக் கல்வியோடு சேர்த்து வளர்க்க வேண்டும்

மானிப்பாய் பெப் 28

கலை என்பது ஓர் இனத்தின்பண்பாடு; ஒரு சமுதாயத்தின் வெளிப்பாடு இக் கலையைக் கல்வியோடு சேர்த்து வளர்க்க வேண்டும். பரீட்சைக்கு எனப் பாடம் பயிலும் மாணவர்கள் பரீட்சையை மட்டும் நோக்காகக் கொள்ளாமல் தமது பாரம்பரிய கலைகளை, பண்பாடுகளைப் பாதுகாத்து வளர்க்கக் கூடிய முறையில் கல்வியைத் தொடர வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் 1988 ஆம் ஆண்டுக்கான இசை நடன, நாடகப்போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி [சைவசமயம்] திரு. எஸ். மகேசன் இவ்வாறு கூறினார்.

மானிப்பாய், தோப்பாய், கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த உதேசக் கோட்டத்துக்கான மேற்படி போட்டிகள் மருதனமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றன.

மானிப்பாய் கல்வி அதிகாரி திரு ச தனஞ்செயன் தலைமையில் நாற்பதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவ மாணவிகள் போட்டிகளில் பங்கு பற்றினர்.

ஆங்கில பாடக் கல்வி அதிகாரி திரு. எஸ் கேதுலசேகரம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மானிப்பாய் கல்வி அதிகாரி திரு, எஸ் தனஞ்செயன் இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திரு. எஸ் சோதிப்பெருமாள் ஆகியோரும் உரையாற்றினர் (இ 90]

## ஒட்டுசுட்டானில் மீண்டும் கோமாரி

ஒட்டுசுட்டான், பெப் 28

ஒட்டுசுட்டான் பகுதியில் மீண்டும் கோமாரி நோய்பரவும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இப்பகுதியில் பலமாடுகள் தினமும் இந்நோயினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்து வருகின்றன.

இந்நோய் பரவாமல் தடுப்பதற்கான முன்னேற்பாடு நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை என இப்பகுதி கால்நடை வளர்ப்போர் சங்கப் பிரமுகர் ஒருவர் கவலை தெரிவித்தார். [உ-113]

## உடற்பயிற்சிப் போட்டி மார்ச் 7 முதல் 17 வரை

யாழ்ப்பாணம், பெப் 28

யாழ். கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் உடற் பயிற்சிப் போட்டிகள் மார்ச் 7ஆம் திகதி தொடக்கம் மார்ச் 17-ஆம் திகதி வரை வட்டார ரீதியில் நடைபெற விருக்கின்றன.

இதற்கு முன்பாக இவ் வுடற் பயிற்சிப் போட்டிகள் கொத்தணி மட்டத்தில் நடத்தப்படும்.

கொத்தணி மட்டத்தில் முதல் இரு இடங்களையும்பெறும் குழுக்கள் வட்டார இறுதிப் போட்டியில் பங்கு பற்றும்.

வட்டாரப் போட்டியில் முதல் இடத்தைப் பெறும் குழு மாவட்ட இறுதிப் போட்டியில் பங்குபற்றும்

வடமராட்சிக் கோட்டக்கொத்தணி மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டிகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

8-3-89 மு ப. உடுத்துறை கொத்தணி - உடுத்துறை ம. வி., புலோலி கொத்தணி - புட்டளை ம. வி.

பி ப. நாகர் கோவில் கொத்தணி - நாகர் கோவில் ம. வி., பருத்தித்துறை கொத்தணி - புட்டளை ம வி.

9-3-89 மு ப. கரவெட்டி கொத்தணி - விக்கினேஸ்வரா ம. வி., உடுப்பிட்டி கொத்தணி - வல்வெட்டி இந்து ம வி.

பி. ப. நெல்லியடி கொத்தணி - நெல்லியடி ம வி., வல்வெட்டித்துறை கொத்தணி - வல்வெட்டி இந்து ம. வி. (ச)


JAFFNA COLLEGE
VADDUKODDAI

**TOEFL CLASSES**

BEGIN ON 09 03 - 1989
Apply on form Available at the College Office Before 07 - 03 - 1989
THREE MONTHS COURSE:
FEE: RS, 300/-

**Dr. Robert Porter,**
**Course Director, TOEFL,**
**VADDUKODDAI.**

(C-1715)


தமிழர் சிறுபான்மையினராக இருப்பதால்

# சமுதாய முன்னேற்றத்துக்கு ஆங்கில அறிவு அவசியம்

குருநகர், பெப் 28

எமது சுயமொழியில் பிள்ளைகள் கல்வி கற்று வருவது மிகவும் நல்ல விஷயம், என்றாலும் தமிழ் இனம் மிகவும் சிறுபான்மையாக இருப்பதால் எமது சமுதாய முன்னேற்றத்திற்கு ஆங்கில அறிவு அவசியமாகின்றது.

பாஷையூர், புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலய பரிசளிப்பு விழாவில் கௌரவவிருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ் - ஆயர் பேரருள் வ தியோகுப்பிள்ளை ஆண்டகை மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய முன்றலில் அதிபர் சங் - சகோதரி மரியகொறற்றி தலைமையில் விழா ஆரம்பமானது

பங்குத் தந்தை அருட்திரு ஜே. ஏ, பிரான்சிஸ் அடிகள் மங்கள விளக்கேற்றினார்.

யாழ் - வட்டாரக் கல்வி அதிகாரி திரு, இ. சிவானந்தன் பாடசாலைக் கொடியை ஏற்றி வைத்தார்.

யாழ் - ஆயர் அதிவண கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது;

''இப்பாடசாலையை அரசு கையேற்பதற்கு முன் கத்தோலிக்கத் திருச்சபை நடத்தி வந்தது. அதன் பின்புச் திருச்சபை தனக்கும் சொந்தமான காணிகளைக் கல்லூரியின் விஸ்தரிப்புக்காக வழங்கியது.

திருச்சிலுவைக் கன்னியாஸ்திரி ஒருவரே அதிபராகவும் விளங்குகின்றார்.

பாடசாலைகளை இயக்குவதில் பல முட்டுக்கட்டைகள் இருக்கின்றன. அவற்றின் மத்தியிலும் இப்பாடசாலை சிறந்த முறையில் இயங்கி வருவது மகிழ்ச்சி தருகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்;

வடக்கு - கிழக்கு கல்விப் பணிப்பாளர் திரு. வெ சபாநாயகம் பிரதம விருந்தினர் உரையில் கூறியதாவது:-

அரசாங்கம் சகலதையும் தரும் என்று எதிர்பார்க்கக் கூடாது. கல்வித் திணைக்களம் தளபாடங்கள், உபகரணங்களை வழங்கலாம். அவற்றையும், பாடசாலையையும் அழகுறப் பேணுபவர்கள் பெற்றோர்களே.

பெருந்திரளாகப் பெற்றோர் இவ்வைபவத்தில் கலந்திருப்பதைப் பார்க்கையில் பாடசாலையில் அவர்கள் எந்தளவு அக்கறையாக இருக்கிறார்கள் என்பதை உணர முடிகிறது.

'சமூகத்தின் கண்ணாடி தான் பாடசாலை' என்பது அமெரிக்கத் தத்துவஞானி ஒருவரின் கூற்று. சமூகம் பாடசாலையை வளர்க்க வேண்டும். பாடசாலை சமூகத்தைச் சிறப்பாகக் கட்டி எழுப்ப வேண்டும்.' இவ்விதம் அவர் கூறினார்.

யாழ் - மாநகர சபை ஆணையாளர் திரு: அன்ரன் அல்பிறட் தெரிவித்ததாவது;

கலை, கலாசாரம் அறிவு பண்பு ஆகிய துறைகளில்இவ்வித்தியாலயம் சிறந்த முறையில் வளர்ந்து வந்துள்ளது.

பாடசாலையில் இருந்து வெளியேறும் மாணவ, மாணவிகள் சிறந்த பிரஜைகளாக உருவாவதே பாடசாலை அதிபரது அபிலாஷையாக இருக்கும்.

இந்தவகையில் இவ்வித்தியாலய அதிபர் சங்கைக்குரிய சகோதரி சிறந்த கல்விச்சேவையயாற்றி இருக்கிறார். இப்படி அவர்கூறினார்.

வித்தியாலய அதிபர் சங் - சகோதரி மரிய கொறற்றிபாடசாலை அறிக்கையை வாசித்தார். வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் ஆசிச் செய்தி வாசித்தார்,

இறுதி புலவர் சபாநாயகம் பரிசில் வழங்கினார். ... கலை நிகழ்ச்சிகளும் இடம்

## அரசியல் யாப்பின்படியே பிரதமர் தெரிவாவார்

கொழும்பு பெப் 28

வருகிற மாதம் 7 ஆம் திகதி அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறும்.

அன்று ஜனாதிபதி பிரேமதாஸா புதிய பிரதமரின் பெயரை அறிவிப்பார் என்று அரச உயர் மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றம் வருகிற 9 திகதி கூடும்.

அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ளபடியே ஜனாதிபதி பிரதமர் நியமனத்தில் நடந்து கொள்வார் என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் நம்பிக்கையை எவர் பெற்றிருக்கிறார் என்று ஜனாதிபதி கருதுகிறாரோ அவரையேபிரதமராகஜனாதி... கூறுகிறது

யாரை பிரதமராக நியமிப்பது என்பது குறித்து தற்சமயம் அரச எம். பிக்களின் 'நாடி' யைப் பிடித்துப் பார்ப்பதில் ஜனாதிபதி பிரேமதாஸா ஈடுபட்டிருக்கிறார் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்முறை நாடாளுமன்றத்தில் பலமான எதிர்க்கட்சி (100 எம். பிக்களுடன்) இருப்பதனாலும்—

எதிர்க்கட்சி வரிசையில் பழம் பெரும் எம். பிக்கள் மீண்டும் இடம் பெற்றிருப்பதாலும்—

எதிர்க்கட்சி ... ஜனாதிபதி நியமிப்பார் ...


# Vacancies for A Construction Company in Japan

1. Building Supervisors
2. Electricians for Buildings
3. Aircondition Mechanics
4. Plumbers
5. Welders - Oxydens N Arc
6. Barbenders
7. Crane Operators
   [1] Tower Crane
   [2] Mobile Crane
8. Showel Operators
9. Forklift Operators
10. Carpenters
11. Masons
12. Drivers - Construction
13. Heavy Vehicle Drivers
14. Cooks - Asian
15. Cooks Helpers
16. Construction - Labourers, Helpers.

SALARY U S DOLLARS 5 0
FOOD ACCOMMODATION
AND MEDICAL FREE.
AGE LIMIT 20 to 42 YEARS

**Vacancies for a reputed Restaurant**

1. Helpers
2. Waiters

AGE LIMIT UNDER 26 YEARS
SALARY U S DOLLARS 700
Food Accommodation, Medical and Uniform Free

**Conditions of Contract**

1. Two Years Contract
2. Food Accommodation Medical and Uniform Free
3. Ten Hours Work per Day
4. Return Ticket after Two Years
5. Insurance and other benefits - According to Japanese Labour Law
6. Original Experience Certificates, Qualification Certificate should be in hand for Interview and at the time of Arrival In duty place

**Documents Requirements:-**

PASSPORT - ALL COUNTRIES ENDROSEMENT AND 10 PHOTOGRAPHS AND PHOTOCOPY OF ALL THE CERTIFICATES

**T. V. TRAVELS & TOURIST**

**Brown Road,**
**Railway Station (Front)**
**Kokuvil.**

C/ 16 2,



உங்கள் குழந்தைகளின்
எதிர்காலத்தை வளமாக்க
உழைக்கும்போதே சிறுகச்சிறுகச் சேமியுங்கள் . . .

சேமிப்புக்கு வழிகாட்டி

★ ஷப்ரு ★

மாதாந்த சேமிப்பு உயர் வட்டியுடன்
உங்கள் கைகளுக்குக் கிடைக்க "ஷப்ரு"வை நாடுங்கள்.

மாதாந்தம் ரூபா 500/- சேமித்தால்
36 மாதங்களில் ரூ 23216/35 கிடைக்கும்

மாதந்தோறும் 100 ரூபாவின் மடங்குகளாக
12, 24, 36 மாதங்களுக்குச் சேமிக்க முடியும்.

மேலதிக விபரங்களை எமது அலுவலகத்திற்கு நேரில் வந்தோ அல்லது கீழேயுள்ள கூப்பனை நிரப்பி அனுப்புவதன் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.

**ஷப்ரு யுனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட்**

61, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு-4.
207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தங்களின் மாதாந்த சேமிப்புத் திட்டம்பற்றி மேலதிக தகவல்களை தயவுசெய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

பெயர் :..............................
விலாசம்:..............................
தொழில்:..............................

(C/5163) கையொப்பம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பெரும்பாலான மாணவர்களை திறமை அடிப்படையிலேயே தெரிவு செய்கிறோம்

## அரசாங்க உதவி போதாமையினாலேயே நன்கொடைப்பணம் அறவிடும் நிர்ப்பந்தம்

### சென் பற்றிக்ஸ் அதிபர் விளக்கம்

இன்று எம்மத்தியில் பெருகிவரும் கல்விப் பிரச்சினைகளில் பாடசாலைகளில் மாணவர்களுக்கு இடம்பெறுவது முக்கியமான தொன்றாக உள்ளது. அண்மையில் எமது வாசகர் ஒருவரும் இப்பிரச்சினையை "மக்கள் சந்தி"யில் எழுதியிருந்தார்

இப்பிரச்சினை வருடாவருடம் தோன்றி பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் வேண்டாத சிரமங்களை ஏற்படுத்துவதால் இதைத் திருப்திகரமான முறையில் தீர்த்து வைப்பதற்கு என்ன வழிவகைகளைக் கையாளலாம் என்ற நோக்குடன் சில பெரிய பாடசாலைகளின் அதிபர்கள், கல்விமான்கள், கல்வி நிர்வாகிகள் ஆகியோரைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களை வாசகர்கள் முன் வைக்க முடிவு செய்துள்ளோம்

அரசாங்கத்தின் உதவியுடன் தனியார் பாடசாலையாக இயங்கும் யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபர் அருட் திரு ஜோசப் மைக்கல் அடிகளார் உதயனுக்கு அளித்த பேட்டியை இங்கு பிரசுரிக்கிறோம்

கேள்வி:- சுவாமி அவர்களே! தங்கள் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும் பொழுது நீங்கள் என்ன அடிப்படையில் அவர்களைத் தெரிவுசெய்கிறீர்கள்?

பதில்:- இவ் விடயத்தில் எதுவிதமான ஒளிப்பு மறைப்பும் இல்லை நீங்களே எமது "பைல்களைப்" பார்வையிடலாம் பதிவேடுகளை எம் முன் திறந்து வைக்கிறார்) மாணவனின் திறமைக்கு முதலிடம் கொடுக்கிறோம். 70 சதவிதமான மாணவர்களை எதுவித சாதிசமய வேறுபாடுமின்றிபுகுமுகு பரீட்சைப் பெறுபேறின் அடிப்படையிலும் மிகுதி 30 சதவிதமானோரைப் பின்வரும் அடிப்படையிலும் அனுமதிக்கிறோம் எமது பழைய மாணவர்களின் பிள்ளைகள், வெளிப்பங்குகளில் இருந்து வரும் கத்தோலிக்க பிள்ளைகள், எமது பாடசாலையில் படிக்கும் மாணவர்களின் சகோதரர்கள் ஆகியோர் ஒரு குறைந்த பட்சப் புள்ளியைப் பெற்றிருந்தால் அவர்களுக்கு அனுமதி வழங்குகிறோம். எமது ஆசிரியர்கள், காரியாலய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் ஆகியோரின் பிள்ளைகளை எதுவித கட்டுப்பாடும் இன்றி அனுமதிக்கிறோம். அத்துடன் விவேகமான பிள்ளைகளுக்கு புலமைப் பரிசு வழங்குகிறோம் அனுமதிப் பரீட்சையில் முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவர்களுக்கு "பிஷப்" புலமைப் பரிசில் வழங்குகிறோம். மாணவர்களுக்கான அனுமதியை ஓர் ஆலோசனைக் குழுவின் ஆலோசனைப்படியே வழங்குகிறோம்.

கேள்வி: ஏழை மாணவரின் தனித் திறமை, கெட்டித்தனம் பெரிய பாடசாலைகளின் முன்னே செல்லாக்காசு' ஆகிறது என்ற ஒரு கருத்து நிலவுகிறது. அதற்கு உங்கள் பதில் என்ன?

பதில்: தனித் திறமைக்கே நாம் முதலிடத்தைக் கொடுத்துள்ளதை நான் இப்பொழுது காட்டிய அனுமதி கோரிய மாணவர்கள் பெற்ற புள்ளிகளில் இருந்து திருப்தி அடைந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

கேள்வி: பெரிய பாடசாலைகளில் நன்கொடை வழங்காமல் இடம் கிடைப்பதில்லை எனக் கூறப்படுகிறது. அது குறித்து உங்கள் நிலை என்ன?

பதில்: ஆம் நாம் மாணவர்களிடமிருந்து நன்கொடை பெறுவது உண்மை. எமது ஆசிரியர்களுக்கு நாம் வழங்கும் தொகையில் 2/3 பங்கையே அரசாங்கம் எமக்குத் தருகிறது. எங்களிடம் 78 ஆசிரியர்கள் உள்ளர்; இவர்களில் 62 ஆசிரியர்களுக்கே அரசாங்கம் மெச்சுச் சம்பளம் தருகிறது மிகுதி ஆசிரியர்களுக்கு நாம் எப்படி சம்பளம் கொடுப்பது? நாம் இயங்க வேண்டுமானால் பெற்றோர்



வண. பிதா மைக்கல் ஜோசப்

பழைய மாணவர்களிடம் இருந்து நன்கொடை பெறவேண்டியதாயிருக்கிறது.

கேள்வி: பெரிய பாடசாலை என்ற "மாயை"க்குள் பெற்றோர் சிக்கித் தவிக்கிறார்கள் என்ற கூற்றுக் குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்: பெரிய பாடசாலை என்பது ஒரு புகழ்! அது மாயை அல்ல, அந்தப் புகழைத் தமது பிள்ளைகள் அடைய வேண்டுமெனப் பெற்றோர்கள் போட்டியிடுவதில் வியப்பில்லையே.

கேள்வி, பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு 'புரோக்கர்'கள் இருப்பதாகக் கூறப்படுகிறதே?

பதில்: நான் இன்று தான் கேள்விப்படுகிறேன். பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்குப் பணம் செலவு செய்வதில் பின் நிற்பதில்லை. அந்நிலையில் தமது பிள்ளைகளை சேர்ப்பதற்கு 'புரோக்கர்மார்' எதற்கு?

கேள்வி: சாதாரண பாடசாலைகளுக்குப் போதிய கட்டடம், ஆசிரியர் வசதிசெய்துகொடுக்கப்படாததால் தான் பெரிய பாடசாலைகளுக்கு 'மவுசு' ஏற்பட்டுள்ளது என்று சொல்வதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

பதில்: நீங்கள் சொல்வது சரி பாடசாலைகளில் ஆசிரிய, விஞ்ஞான ஆய்வு கூட, நூல் நிலைய' விளையாட்டு கட்டட வசதிகள் இருப்பதால் கூடிய மாணவர்களை அனுமதிக்க முடியும். மாணவர்களுக்குச் சிறந்த கல்வியைக் கொடுக்க முடியும் பாடசாலைகளில் கல்வித் தரம் குறைவதற்கு ஆசிரியர் பற்றாக் குறையே காரணம் என்பது முற்றிலும் சரி அரசாங்கம் ஆசிரியர் பற்றாக் குறையை நீக்ககூடுதலான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும் ஆசிரியர் தொழிலுக்கு ஆட்கள் இல்லை எனக்கூற முடியாது சென்ற மூன்று ஆண்டுகளில் எமது கல்லூரியில் ஆசிரியர் தொழில் கோரி 89 பேர் மனுச் செய்துள்ளனர். இந்த ஆண்டு 11 பேர் ஆசிரியர் வேலைக்கு மனுச் செய்துள்ளனர். ஆகவே ஆள் அணி எம்மிடம் இருக்கிறது. அரசாங்கம் தான் போதுமான ஆசிரி

வதில்லை.

கேள்வி: ஏழை மாணவர்கள் பெரிய பாடசாலைகளில் அனுமதி பெற வழிவகைகளைக் கூற முடியுமா?

பதில்: நிச்சயமாக ஒருவன் ஏழை என்பதற்காக எங்கள் பாடசாலையில் அனுமதி மறுக்கப்படுவதில்லை நாம் எமது பாடசாலையில் அனுமதிப் பரீட்சையில் தமிழ் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் தகுதிகாண் பரீட்சை (Aptitude Test) ஒன்றையும் நடத்துகிறோம் இப் பரீட்சையில் மாணவனின் கெட்டித்தனத்தை நாம் பரீட்சிக்கிறோம். அவனின் சாதனைகளை (Performanec) அல்ல மேற் கூறிய மூன்று பாடங்களில் ஒரு மாணவன் அனுமதி பெறுவதற்குத் தேவையான புள்ளிகளைப் பெறாவிட்டாலும் தகுதிகாண் பரீட்சையில் சித்தி அடைந்தால் நாம் அம் மாணவனுக்கு அனுமதி வழங்குகிறோம். ஏனெனில் வசதி குறைந்த பாடசாலையில் கல்வி கற்கும் மாணவனுக்கும் வசதி குறைந்த வீடுகளில் இருந்து வரும் மாணவனுக்கும் இப் பரீட்சை கைகொடுக்கிறது. திறமையான மாணவன் எக்காலத்திலும் எவ்விடத்திலும் புறக்கணிக்கப்படமாட்டான்,

கேள்வி:- கிராமப் புறப்பாடசாலைகளில் கல்வி கற்று பரீட்சையில் நல்லதரத்தைப் பெறும் மாணவர்கள் அப்பாடசாலையில் தொடர்ந்து படிப்பதில்லை நகரப்புறத்திலுள்ள சிறந்த பாடசாலைகளை நோக்கிப் படையெடுக்கின்றனர் இதனால் இரு பிரச்சினைகள் எழுகின்றன- ஒன்று முதல்தர மாணவர்களைக் கிராமப்புற பாடசாலைகள் இழக்கின்றன- இரண்டாவது கிராமப் புற மாணவர்களின்

பேட்டி: கதிரோன்

படையெடுப்பினால் நகரப்புறக் கல்லூரிகளில் இடநெருக்கடி ஏற்படுகிறது- ஆகவே இவைகளை நிவர்த்தி செய்ய நீங்கள் கூறும் ஆலோசனைகள் யாவை?

பதில்:- கிராமப்புறங்களில் இருந்து நகரப் பகுதிகளுக்கு மாணவர் படையெடுப்பை நிறுத்துவது அவசியம் இதற்கு நான் முன்பு கூறியவாறு கிராமப்புற பாடசாலைகளின் தரத்தை உயர்த்துவது சிறந்த மார்க்கம் ஆகும்.

அரசாங்கம் ஆசிரியர், கட்டடம், விளையாட்டு, நூலகம், ஆய்வு கூட வசதிகளைப்பெரிய பாடசாலைகளில் காணப்படும் அளவுக்கு கிராமப்புறப் பாடசாலைகளிலும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்

என்னைப்பொறுத்தளவில் எமது ஆசிரியர்கள் திறமை மிக்கவர்கள். சிறிய பாடசாலைகளில் அக்கறையற்ற முறையிலும் பெரியபாடசாலைகளில் அக்கறையுடனும் பாகுபாடு காட்டிக் கல்வி போதிப்பதில்லை. ஆகவே அவர்களின் திறமைகளின் உச்சநிலையைப் பெறுவதற்கு அவர்களின் கற்பித்த[illegible] ளங்களையும் குழலையும்

டின்றி வழங்கவேண்டும்.

புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்வு பெறும் மாணவர்களை அந்தந்த மாணவர்களின் கொத்தணி அமைப்புக்குள்ளேயே வைத்துக் கொள்ளவேண்டும் இப்பொழுது புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவன் நகரப்புறத்திலுள்ள பெரிய பாடசாலையை நோக்கி வருகிறான் ஏன்? இங்கு அவன் தனது பூரணமான கல்வியைத் தொடர்ந்து பெறுவதற்கு வேண்டிய வசதிகள் பல உண்டு. புதிதாக உருவாக்கப்படும் கொத்தணிப் பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் யாழ்நகரில் மக்கள் விரும்பி அனுமதி கோரும் கல்லூரிகளின் தரத்துக்கு உயர்த்தப்படவேண்டும்

புலமைப்பரிசில்பெறும் மாணவர்களுக்கு அரசாங்கம் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தலாம். உதாரணமாக புலமைப்பரிசில் பெற்ற மாணவர்கள் தாம்விரும்பிய கல்லூரியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உடையவராவர் ஒரு புலமைப் பரிசில் பெற்ற மாணவன் தனது கொத்தணியில் உள்ள பாடசாலையில் தொடர்ந்து படித்தால் மட்டுமே அவனுக்கு உபகாரச் சம்பளம் (Bursary) பெற முடியும். அவன் தனது கொத்தணியை விடுத்து வேறு ஒரு பாடசாலைக்கு அனுமதி கோரினால் அவனுக்கு அப் பாடசாலை அனுமதி வழங்கலாம் ஆனால் உபகாரச் சம்பளம் (Bursary) வழங்கக் கூடாது.

இது போன்ற ஒரு நிபந்தனையை அரசாங்கம் கொண்டுவருமானால் திறமையான மாணவர்கள் நகரப்புற பாடசாலைகளுக்கு இடம்பெயர்வதை ஓரளவு கட்டுப்படுத்தலாம். ஆனால் பெற்றோரின் விருப்பத்துக்கே முதலிடம் வேண்டும் என்ற நியதியை எச் சட்டமும் கட்டுப்படுத்தக் கூடாது நன்றி! ★

---

## பரீட்சைக்கு ஒத்துழைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப் 28

தமிழ் மாணவரின் கல்வி நலன் கருதி தற்போது நடைபெறும் க.பொ.த சாதாரண பரீட்சை ஒழுங்காகவும், சிறப்பாகவும் நடைபெற பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு சகல ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவ அமைப்புக்கள், பெற்றோர்கள் ஆகியோரிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

---

## வாசகர் திருமுகம்

### சம அந்தஸ்து வேண்டும்

பெரிய பாடசாலைகளில் இடம் கிடையாமல் தவிக்கும் பல மாணவர்களை எனக்குத் தெரியும். சாதாரண பாடசாலைகளில் போதிய வசதிகள் இல்லாமையினால் எத்தனையோ ஏழை மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்கொணர முடியாமல் தவிக்கின்றனர்.

பெரிய பாடசாலைகள் என்ற பெயரை அவை பெற்றிருப்பதற்குக் காரணம் அதிகம் படித்த பெற்றோர்களே. இவர்கள் தமது பிள்ளைகளை வீட்டின் அருகேயுள்ள பாடசாலைகளில் சேர்க்க முயன்றால் அப் பாடசாலைகளையும் முன்னேற்றலாம்.

சாதாரண பாடசாலைகளில் பல பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. சித்திரம், வர்த்தகம், நடனம் போன்றவை அவற்றுட் சில. இந்நிலையில் நாம் ஒப்படை காரணமாக வெளிச்சென்று படித்தால் கூட அந்தந்த பாட ஆசிரியர்கள் பாடசாலையில் கட்டாயம் தேவையாக உள்ளது. ஏனெனில் ஒப்படை பற்றி அவர்கள்தான் எமக்குக் கூறவேண்டும்.

கல்வியைப் பொறுத்தவரையில் ஏழை மாணவர்களுக்கும் சம அந்தஸ்துக் கிடைக்கும் போதே நம் வாழ்வில் உண்மையான விடிவு ஏற்படும்

சிவலிங்கப் புளியடி
யாழ்ப்பாணம், **சி. கங்கா**

---

### மின்சார சப்ளை சீராகுமா?

நீர்வேலியில் ட்ரான்ஸ்போமர் இருந்தும் கூட தொடர்பு கொடுக்காமல் இருப்பதால் மின்சாரத்தின் வோல்டேஜ் குறைந்து மக்களுக்குப் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன.

தோட்டம் செய்வோர் பாவிக்கும் மோட்டருக்கு மின்சாரம் போதாததினால் 'கொயில்' எரிந்து விடுகிறது. வரும் மின்சார வெளிச்சம் மிகவும் குறைவாக இருப்பதனால் மாணவர்கள் விளக்கேற்றி வைத்துப் படிக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விஷயத்தைக் கவனித்து மின்சார ஓட்டத்தை சரிப்படுத்துவார்களா?

நீர்வேலி **- கிராமவாசி**

---

# வடக்கு, கிழக்குப் பகுதி இந்தியாவுக்குத்தேவையில்லை

## இனப்பிரச்சினையால் இலங்கை பிளவுபடுவதை விரும்பவில்லை என்கிறார் தூதர் டிக்ஸிற்

பெப்ரவரி மாதம் ரோட்டறி இயக்கக் கலண்டரின் சர்வதேச புரிந்துணர்வு மாதம் ஆகும்:

இதை ஒட்டி கொழும்பு மேற்கு ரோட்டரிக் கழகம் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது:

தலைப்பு: "இலங்கையின் இன்றைய நிலைமை — இந்திய, இலங்கை உறவுகளின் சில அம்சங்கள்"

பேசியவர்: கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு; ஜே; என்: டிக்ஸிற்.

அவரின் பேச்சில் இடம்பெற்ற முக்கிய பகுதிகளை இங்கு தருகிறோம்.

டிக்ஸிற்றின் பேச்சு வருமாறு:

இந்தியன் என்றமுறையிலும் இந்திய அரசின் பிரதிநிதி என்ற முறையிலும் நான் பேசுகின்றேன்.

இந்தியாவைப் பற்றி இலங்கையர் கொண்டுள்ள அச்ச உணர்வு பிழையானது.

அமைதி உடன்பாடு இலங்கையைக் கைப்பற்ற செய்யப்பட்ட உத்தி என்றும்—

அமைதிப்படை இலங்கையை ஆக்கிரமிக்க வந்தது என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அமைதிப் படை ஒருக்காலும் விலகிக் கொள்ளப்படமாட்டாது என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

தலதா மாளிகைக்கு இந்தியா யானைக்குட்டி ஒன்றை அன்பளிப்புச் செய்தது. அது யானை அல்ல; ட்ரோஜன் குதிரை [Trojan Horse] என்று கொழும்பு நாளிதழ் ஒன்று ஆசிரியர் தலையங்கத்தில் குற்றஞ் சாட்டியது.

இலங்கை Troy அல்ல என்பதையும் இந்தியா Sparta அல்ல என்பதையும் அவர்கள் மறந்து விட்டார்கள்.

இலங்கையைக் கைப்பற்ற இங்கு வரவில்லை உங்களுடன் நண்பர்களாக இருக்கவே நாம் விரும்புகின்றோம்

இந்தியாவில் 25 மாநிலங்கள் உள்ளன; 17 [illegible] 83 கோடி மக்கள் வாழ்கின் பிரச்சினைகள் இந்தியாவுக்கு உண்டு: பின்னர் ஏன் இலங்கையை இந்தியா கைப்பற்ற வேண்டும்?

அயல் நாடு ஒன்றின் பிரச்சினையை நாம் ஏன் சுமக்க வேண்டும்?

இந்தியாவுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் ஏதாவது பிரத்தியேகமாக இலங்கையில் இருக்கிறதா? உதாரணத்திற்கு திருகோணமலைத் துறைமுகம்

ஆம், திருமலை, கேந்திரமான இடத்தில் தான் உண்டு.

இருக்கும் தொழில் நுட்ப ஆற்றலுடன் எமது நாட்டில் கடந்த 40 ஆண்டுகளில் சில துறைமுகங்களைக் கட்டி உள்ளோம். வேறு துறைமுகங்கள் எமக்கு தேவை இல்லை ஏனைய நாடுகளில் இராணுவ தளங்கள் வைப்பதை நாம் எதிர்க்கின்றோம்.

இந்திய பொருளாதாரத்திற்கு நன்மை தரக்கூடிய பிரத்தியேக வளங்கள் இலங்கையில் உண்டா?

இந்தியாவில் அதிகரித்து வரும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவை போதுமானவையா?

எம்மீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய பெரிய சந்தை வாய்ப்பு இலங்கையிடம் உண்டா?

இலங்கையின் மொத்த ஏற்றுமதி, கல்கத்தா நகரின் ஏற்றுமதிக்குச் சமமாகத்தான் உள்ளது-

எமக்கு சிறிய வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஏன் தேவை?

நீங்கள் [இலங்கை] ஐக்கியமாகவும் ஸ்திரமாகவும் இருக்க வேண்டும் என்று தான் நாம் [இந்தியா] விரும்புகின்றோம்

புவியியல்,' அரசியல் மற்றும் இராணுவரீதியாக தமிழ் நாட்டுக்கு இலங்கை தேவை இல்லை.

ஆக்கிரமிக்கும் தன்மை [illegible] இல் பேசியிருந்தால் [இலங்கை] உங்கள் பிரச்சினைகள் குறித்து நாம் குற்றம் கண்டு தொந்தரவு கொடுத்திருந்தால், அதற்குக் காரணம், உங்கள் பிரச்சினைகள் எம்மை பாதித்ததே.

உங்கள் மனம் புண்பட நாம் பேசியிருந்தால் — அந்த வரை அது சட்ட பூர்வமானதே

இவ்வளவு அரசியல் குழப்பங்களுக்கு மத்தியிலும் இந்தியாவின் உறவு, நல்லெண்ணம், விசுவாசம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்து உள்ளது.

தனது பிரதேச ஒருமைப்பாட்டை இந்தியா எப்படி பாதுகாக்குமோ அது போலவே இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டையும் இந்தியா பாதுகாக்கும்.

இப்படி திரு. டிக்ஸிற் தெரிவித்தார்.

இலங்கை அரசியல் வானில் இருந்து வெளியேறுவது உங்களுக்கு நிம்மதி தருகிறதா? - கேள்வியை பார்வையாளர் ஒருவர் திரு டிக்ஸிற்றிடம் கேட்டார்.

அதற்கு திரு டிக்ஸிற்: நல்லது நான் வெளிப்படையாகச் சொல்கிறேன்

உங்களை ஒருவருக்கும் தேவை இல்லை என்றால்- உங்களை அசௌகரியம் கண்டிக்கிறீர்கள் என்றால் அதன் அர்த்தம் நீங்கள் பரபட்சமற்ற முறையில நடக்கிறீர்கள் என்பது தான்

32 ஆண்டுகள் அரச அதிகாரியாக 10 நாடுகளில் பணி புரிந்துள்ளேன்

சில பணிகள் எனக்கு ஒதுக்கப்பட்டன.

எனது நாட்டை பாதுகாத்தேனா?

அதை மக்களுடன் சௌஜன்யமாக செய்தேனா? நண்பர்களை கைவிட்டேனா? என் பதே அவை

இவற்றுக்கு எல்லாம் எனது ஒரே பதில்- என கொடுத்த பணியை நான் செய்து முடித்தேன் என் பதே'

பிரிட்டிஷார் காலத்தில் இலங்கைத் தமிழர் முக்கிய இடங்கு வகித்தனர். இதனால்தான் சொந்த மக்களான தமிழர் மீது இலங்கைப் பெரும்பான்மை இனம் பாரபட்சம் பாராட்டத் தொடங்கியது.

இதற்குத் தீர்வு காணுவதற்குரிய தலைமைத்துவம் இங்கு இல்லாமல் இருக்கவில்லை தீர்வு காண தலைமைத்துவம் முயற்சித்தது. ஆனால் பெரும்பான்மையினர் என்ற உணர்வுடன் கூடிய ஆவேசப் போக்கு கொண்ட சக்திகள் தடுத்து விட்டன.

இலங்கைத் தமிழர் மீது இந்தியாவுக்கு தனித்த அன்போ, பாசமோ இல்லை.

இலங்கையில் இருந்து எமது நாட்டுக்கு வந்த ஒரு லட்சத்து 35 ஆயிரம் அகதிகள் இந்தியத் தமிழரின் அனுதாபத்தை மட்டும் அல்ல. இந்திய மக்கள் அனைவரின் அனுதாபத்தையும் பெற்றனர்

அயல் நாடு ஒன்றின் கொள்கை எமது நாட்டில் பிரிவினைக்குச் சாத்தியமான காரியங்களை ஏற்படுத்துவதை நாம் விரும்பவில்லை

பொறுப்புணர்ச்சியுடன் ஆழமாக நீங்கள் சிந்தித்துப் பருங்கள் எக்கட்டத்திலும் இலங்கை இனப்பிரச்சினை காரணமாக பிளவுபடுவதை இந்தியா விரும்பவில்லை என்பதை நீங்கள் உணர்வீர்கள்

இலங்கை அரசுத் தலைமை மற்றும் தமிழர் தலைமை ஆகியவற்றுடன் நாம் நீண்ட காலமாக நடத்தி வந்த பேச்சுக்கள் இதற்குச் சாட்சி பகரும்.

இப்படி திரு டிக்ஸிற் சொன்னார். (இ-எ)

---

### தகவல் மேடை

## பெற்றோல் விலை வீழ்ச்சி; விவசாய நிதியமும் ஆட்டம் காண்கிறது

விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) என்பது வளரும் நாடுகளுக்கு உதவி புரியும் ஒரு உலக ஸ்தாபனமாகும்.

இந்த நிதியம் வளரும் நாடுகளின் ஏழை விவசாயிகளுக்கும் பெண்களுக்கும் கடன் வழங்கும் திட்டங்களை நடத்தி வந்தது தக்க தொழில் நுட்பத்தைப் புகுத்தத் துணைபுரிந்தது; சிறிய கமக்காரர்களின் தேவைகளைக் கவனிக்கும்படி ஆராய்ச்சி நிறுவனங்களைத் தூண்டியது.

ஆனால் உலகில் பெற்றோலியத்தின் விலைவாசி குறைந்துள்ளபடியால் இந்த நிதியம் நிதி ரீதியில் ஆட்டம் கண்டுள்ளது.

பெற்றோலிய ஏற்றுமதி நாடுகள் இந்த நிதியத்தின் செலவில் [illegible] வாசியைக் கொடுத்து வந்தன. பின்னர் இவை மூன்றில் ஒரு பகுதிக்கு சற்று மேல் கொடுத்தன. தற்பொழுது இவை தமது 1989 கொடுபனைவைத் தீர்மானிக்க மார்ச் வரை காலம் கேட்டிருக்கின்றன.

பெற்றோலிய ஏற்றுமதி நாடுகள் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்துக்கு பணம் வழங்கத் தவறினால் நிதியம் வெளிச் சந்தையில் பணத்தைப் பெற வேண்டி ஏற்படும். இதனால் வட்டி விகிதம் அதிகரிக்கும் எனவும் வேலைத்திட்டங்களின் தெரிவில் வர்த்தக ரீதியான மனோபாவம் அதிகரிக்கும் எனவும் அஞ்சப்படுகின்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைப் பல்கலைக் கழகங்களின் வெளிவாரி பட்டமாணிப் பரீட்சைகள் கல்வியாண்டு 89\90

## விசேட அறிவித்தல்

விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

B. A, B. Com ஆகிய பாடநெறிகளுக்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் மார்ச் 4 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மேற் குறிப்பிட்ட பாட நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

* 2 ஆம் பிரிவிற்கான பயிற்சி வகுப்புகள்
  ஆரம்பம்: 04 - 03 - 89
* G. A. Q. சித்தியடைந்த மாணவர்களுக்கான B. A. வகுப்புகளும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

பேராதனை, சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவுகள் அனைத்தும் நிறுவனத்தினுல் செய்து தரப்படும்.

பதிவாளர்

# ASTAN INSTITUTE

**166/1 Hospital Road, Jaffna.**

(A.S சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)

(C/1680)

## வீடும் வளவும் விற்பனைக்கு

1. சூராவத்தை புனித திரேசா ஆலயத்துக்கு கிட்ட தற்சமயம் ஞா. பாக்கியநாதன் (அரசு) இருக்கும் வீடு. 3 பரப்புக் காணியுடன், பங்கு இல்லாத தனிக் கிணற்றுடன்,
2. சூராவத்தை அம்மன் கோயிலுக்கு முன்பாக உள்ள வீதி அருகில் 7 பரப்புக் காணி,
3. யேமன் "BOSH" இருகதவு குளிர் சாதனப் பெட்டி,


இவை உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்க —

R. E. யோசேப் (குணசிங்கம்)
குமாரசுவாமிப் புலவர் வீதி,
சுன்னுகம்,

சுன்னுகம் புகையிரத நிலைய பாதையில் இருந்து 200 யாருக்குள் - நீர் வடிகால் கிணற்றுக்கு அருகில். (9394)

## 50-ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### செ. சோமசுந்தரம் [மார்க்கண்டு]

(முன்னுள் கிராமசபை அங்கத்தவர்)
(கணக்காளர் - தநீம் றைஸ் மில், வவுனியா)

**மண்ணில்: 19-09-1929 விண்ணில்: 01-01-1989**

அன்பின் திருவுருவாய் அறிவின் சுடர் ஒளியாய் வாழ்ந்து எங்களை எல்லாம் இடையில் தவிக்க விட்டுப் பிரிந்து சென்ற ஆருயிர் தெய்வமே! எம்மை எல்லாம் கடமை - கண்ணியம் - கட்டுப்பாட்டுடன் வளர்த்து ஆளாக்கி எம் பலனைத் தாங்கள் அனுபவித்து மகிழ்ந்து வாழும் நேரத்தில் எங்களை ஆருத் துயரில் விட்டுச் சென்ற ஒளி விளக்கே. உங்கள் மனநிலை எங்களுக்கு விளங்கும். அதை நாங்கள் நிறைவேற்றி உங்கள் பாதாரவிந்தத்தில் அஞ்சலி செலுத்துவோம் இது சத்தியம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குலவிளக்கு ஆஸ்பத்திரியில் கடும் சுகவீனமுற்று இருந்த வேளையில் இரவு பகல் என்று பாராமல் வேண்டிய மருத்துவ உதவி அளித்து உதவிய வைத்திய நிபுணர் திருமதி N. நாகேந்திரா அவர்கட்கும் மற்றும் சக ஊழியர்களுக்கும் மரணித்த செய்தி கேட்டு ஓடோடி வந்து மரணச்சடங்கில் பங்கு பற்றியும் ஆறுதல் வார்த்தைகள் கூறியும் சகல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் பல சிரமத்தின் மத்தியிலும் எமது துயரில் பங்கு கொண்ட வவுனியா, தநீம் றைஸ் மில் உரிமையாளர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


09 - 02 - 1989 வியாழக்கிழமை புங்குடுதீவு, பாணவிடை சிவன் தீர்த்தக்கரையில் நடைபெற்ற அந்தியேட்டி கிரியையிலும் இல்லத்தில் இடம்பெற்ற வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரன்.

ஊரதீவு, புங்குடுதீவு. (C-1191)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அருளப்பு அன்ரனி

உதித்தது 6-9 1967
உதிர்ந்தது 28-2-1988

இன்றுடன் ஓராண்டு முடிந்ததையா
ஒருவராலும் மறக்க முடியவில்லையையா
நூறாண்டு முடிந்தாலும்
எந்நாடிப்பொழுதும் உம்மை மறவோம்

அப்பா, அம்மா, அண்ணுமார் அக்காமார், தம்பி, தங்கைகள், மாமாமார், அத்தைமார், சித்தப்பா, சித்திமார், அத்தான்மார்.

இராசவீதி,
கோப்பாய் தெற்கு. (9556)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் சுதிகரன் (சுதி)

அன்னை மடியில்: 05 02-1966
இறைவன் அடியில்: 28-02-1988

திதி: 17-03-1989

அன்பு என்ற சொல்லுக்கோர் ஒளி விளக்கே!
ஆருயிர் துணை மகனே! எம்மைக் காப்பாய்
என்று நம்பி இருந்தோம் மகனே!
எம்மையும் அங்கு அழைத்திடாயா?
வான் முகத்தை நாம் பார்த்து மகிழவில்லை
வளர்மதியை பார்த்து நாம் மகிழவில்லை
யார் முகத்தை யாம் பார்த்து மகிழுவோமோ?
இனிவாக மொழி பேசி பிறர்க்காக
வாழ்ந்த கற்கண்டே!
நீ போன இடம் சொல்வாயே!

ஆறுது, ஆறுது நெஞ்சம் இது அழுதாலும் தீராது துன்பம் வேறுங் மாறுத பந்தம் எங்கள் விழி நீரே சுதி உன் மஞ்சம். நீ மீளாத் துயில் கொண்டு ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும் மாறுது மறையாது ஒளி வீசும் உன் உருவம் எம்மை விட்டு அகலாது.

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்,

அப்பா, அம்மா, அண்ணு, தம்பிமார், தங்கை, மாமா, மாமி, சித்தப்பா, சின்னம்மா, சித்தி, அம்மம்மா, உறவினர்கள்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (9656)

# VACANCY

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

உடனடி வேலைவாய்ப்பு

## 1. சவூதி அரேபியா

### Saudi-Operation & Maintance Company

| | | Nos. | |
|---|---|---|---|
| (1) | Tyreman | 01 | 550 SR + 125 FA |
| (2) | Sheet Metalworker | 01 | 550 SR + 125 FA |
| (3) | Fuel Injection Calibdralion Mechanic | 01 | 700 + 125 FA |
| (4) | Auto Electrician | 02 | 550 + 125 FA |
| (5) | Lockshith | 01 | 550 + 125 FA |
| (6) | Panel Beater | 01 | 625 + 125 FA |
| (7) | Painter Spray | 02 | 550 + 125 FA |
| (8) | Electrician | 04 | 775 + 125 FA |
| (9) | Sewage Pipe Plumber | 02 | 700 + 125 |
| (10) | Sewage Pipe Fitter | 02 | 700 + 125 |
| (11) | Sewage Water | 02 | 700 + 125 |
| (12) | Painter | — | 550 + 125 |
| (13) | Road Painter | — | 550 + 125 |
| (14) | Furniture Polisher | — | 550 + 125 |
| (15) | Foreman (Cleaning Services) | — | 485 + 125 |
| (16) | Pest Control | — | 700 + 125 |
| (17) | Radio Operator | 3 | 750 + 125 |
| (18) | Mason | — | 600 + 125 FA |
| (19) | Carpenter | — | 600 + 125 FA |

வயதெல்லை: 21 முதல் 47 வரை
ஐந்து வருட அனுபவச் சான்றிதழ் வேண்டும்.
நேர்முகப்பரீட்சை: 01 - 03 - 89 — 05 - 03 - 89 வரை
நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடைபெறும்:

**15-03-1989க்குள் போவதற்கு முடியும்**

## 2. Taiwan - தைவான்

வயது 18 முதல் 30 வரை. ஆங்கில அறிவு வேண்டும்

## 3. Beirut - பெய்ரூட்

வயது 18 முதல் 40 வரை

## 4. Kuwait - குவைற்

| | | | |
|---|---|---|---|
| 1. | Cleaners | 35 KD | No Food |
| 2. | Driver (Heavy) | 50 KD | With Kuwait or Gulf Licence. |
| 3. | Driver (House) | 40 KD | |

### Kuwait

| | | | |
|---|---|---|---|
| 1. | Bulldozer Operator<br>புல்டோசர் ஒப்பறேற்றர் | 5 — | 90 K D |
| 2 | Tiper Truck Driver<br>ரிப்பர் றக் றைவர் | 5 — | 85 K D |
| 3. | Dumper / Loader Operator<br>டம்பர் / லோடர் ஒப்பறேற்றர் | 5 — | 90 K D |
| 4. | Divers (சுழிஓடிகள்) | 30 — | 70 K D |
| 5 | Heavy Equp Mech (Diesel)<br>கனரக வாகன மெக்கானிக் (டீசல்) | 1 — | 5 K D |
| 6. | Asst. Mech (Deisel)<br>உதவி மெக்கானிக் (டீசல்) | 4 — | 75 K D |
| 7 | Marine Supervisor<br>Caple of under Worker Civil Worker<br>மராயன் மேற்பார்வையாளர்<br>கீழ் தர வேலையாளர் | 1 — | 125 K D |
| 8 | Black Smith (Door / Winders) | 3 — | 85 K D |
| 9 | Mercides Bens Mechanic<br>பென்ஸ் கார் திருத்துபவர் | 1 — | 85 K D |
| 10, | Steel Fabricator | 3 — | 85 K D |
| 11 | Welders (Arc / Oxy) | 2 — | 85 K D |
| 12 | Hydnaulic Mechanic H. V; Y; Duty | 2 — | 85 K D |
| 13 | Mechanical Engineer Draughtmen | 1 — | 230 K D |
| 14 | Car Electrician | 1 — | 85 K D |

வயது: 20 — 45 வரை. 5 வருட அனுபவச் சான்றிதழுடன், பாஸ்போட், 3 படம் என்பவற்றுடன் எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

## 5. House maid Kuwait & Saudi

Cleaners - Female

ஆகிய வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை. தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் பின்வரும் முகவரியில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# T. V. TRAVELS,

BROWN ROAD, KOKUVIL.

Branch:-

1. K. NAVARATNAM,
   19, Sivan Pannai Road,
   Koddady, Jaffna.
2. KARALASINGAM (Yappan),
   No, 25, Karaikaddu Lane,
   Vannarpannai, Jaffna.
3. S. KUGANANTHARAJAH,
   Thanneerottu,
   Mulliyawalai.

(C/1655)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு.

**பொருள்:**

பகைவரையும் நண்பராக்கிக் கொண்டு நடந்து செல்லும் குணம் உடையவனுடைய பெருந்தன்மையில் தான் உலக நலம் அடங்கியிருக்கிறது


# உதயன்

உண்மை - அறிவாண்மை - ஆம் ...

இல. 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
22078
யாழ்ப்பாணம்.
28. 2. 1989    உ. பெ. இல23


## அவசரம் அதற்கு மட்டுமேன்?

தெற்கு - மேற்கில் வன்செயல்கள். வடக்கு-கிழக்கிலும் வன்செயல்கள் இலங்கை நாட்டின் மத்திய பகுதியிலும் அவை அதிகரித்து வருகின்றன.

புதிய பெருந்தோட்டத்துறை அமைச்சர் காமினி திசநாயக்கா, தமது அமைச்சில் ஞாயிற்றுக்கிழமை நடத்திய பாதுகாப்புப் பற்றிய மாநாடு, மலையகமும் வன்செயல், இராணுவ நடவடிக்கைகளால் பெரிய அளவில் பற்றிப் படரப்பட்டுள்ளது என்பதையே புலப்படுத்துகிறது.

தோட்டப் பகுதியில் நடைபெறும் வன்செயல்கள் இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பெரும் அச்சுறுத்தல்களாக விளங்குகின்றன. தோட்டங்களில் நிர்வாக அதிகாரிகள் கொலை செய்யப்படுவதன் உள் நோக்கம், பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் பெருந்தோட்டத் தொழிலைச் சீர்குலைப்பதே ஆகும்.

எனவே எத்தகைய கஷ்டங்களை எதிர் நோக்கினும், தோட்டத்துறையைப் பாதுகாக்க, சரியான பாதுகாப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் — இவ்வாறு அமைச்சர் காமினி கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

பெருந்தோட்டக் கைத்தொழிலைப் பாதிப்படையச் செய்யும் முயற்சிகள், அவை வன்செயல்களாக இருப்பினும் சரிதான், அமைதியான செயல் ரீதியானதாயினும் சரி தான் அரசாங்கத்துக்கு விடப்படும் சவாலாகவே கருதப்பட வேண்டும்.

பொருளாதாரமும் அரசியலும் பின்னிப் பிணைந்தவை. ஒன்றில்லாமல் மற்றதால் பயனில்லை என்ற அளவுக்கு மக்கள் முன்னேற்றத்துக்கு இரண்டு துறைகளிலும், உரிமைகளும், சுதந்திரங்களும் அவசியமானவை.

இதனை உணர்ந்து கொள்ளாத விதத்தில் இலங்கையின் பெருந்தோட்டத் தொழில் அரசியல்வாதிகளால் கையாளப்பட்டு வருகிறது.

பெருந்தோட்டத்துறை பிரதான பொருளாதாரக் கூறு என்று கருதி அதற்கு அளிக்கப்பட்ட இடம், அதில் பங்காளராகி உழைத்து வரும் தோட்டத் தொழிலாளர்களின் அரசியல், சமூக வளர்ச்சிக்கு வழங்கப்படவில்லை.

சுதந்திரத்துக்கு முந்திய, காலனித்துவ அடிமை நிலையில் அவர்களை வைத்திருக்கவே, தொடர்ந்து பதவிக்கு வந்த ஐ. தே. க; ஸ்ரீ. ல. சு. க. அரசுகள் விரும்பின. மிக அடிப்படை, ஆரம்ப உரிமையான பிரசாவுரிமையை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்குவதில் அவை புரிந்த திருதவிளைகளும், காட்டிய தயக்கங்களும் அதற்குச் சான்று.

இப்போது கூட அவர்கள் ஏனைய பிரஜைகள் போல வாழக்கூடிய அரசியல் சுதந்திர நிலை — உரிமைகளைப் பூரணமாக அநுபவிக்கும் நிலை — உருவாக்கப்படவில்லை அவர்களின் பொருளாதார, கல்வி சமூக நிலை இன்னும் அதளபாதாளத்திலேயே இருப்புக்கொண்டுள்ளது.

இத்தனைக்கும் தோட்டத் தொழிலாளர்கள் தமிழர்கள் என்ற காரணமே உள்ளோடி நிற்கிறது.

மிகச் சமீப காலமாக, ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த தோட்டப் பகுதிகளில் இருந்து அவர்களை அகற்றித் தெட்டம் தெட்டமாக வாழ வைக்க முயற்சிகள் நடந்து வந்தன. ஒரே பிரதேசத்தில் அவர்கள் ஒன்றாக வாழ்வதால் அப்பகுதி தமிழர் பெரும்பான்மைப் பிரதேசமாகி விடும் என்ற அச்சத்தின் கபட எண்ணத்தின் பிரதிபலிப்பே அந்தறல் நடவடிக்கை!

கிராம மயத் திட்டம் என்ற பெயரில் சிங்கள மக்கள் அரசாங்கத்தால் தமிழர் அடர்ந்த தோட்டப் பகுதிகளில் குடியமர்த்தப்பட்டதை (குடியேற்றப்பட்டதை) மறந்து விட முடியுமா?

தோட்டத்துறையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க அவசரப்படும் அமைச்சர் காமினி, தோட்டத் தொழிலாளர்களையும், குறிப்பாகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களையும் சகல விதங்களிலும் பாதுகாக்க முன்வருவாரா?

இதுவரை தனக்கு முன்பிருந்தவர்கள் விட்ட தவறைத் திருத்தி, தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள், நலன்களைப் பாதுகாக்கவும் அவசர நடவடிக்கை எடுப்பாரா?

# அமெரிக்க - பலஸ்தீனப் பேச்சுக்கள் முறிந்து விடும் நிலை உருவாகிறது!

## யாசீர் அரபாத்துக்கு வாஷிங்டன் எச்சரிக்கை

வாஷிங்டன், பெப். 27

வன்செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டால் பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொள்ளப் போவதாக அமெரிக்கா பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத். ஜெனிவாவில் நடைபெற்ற ஐ. நா. சபையின் விசேட பொதுச் சபைக் கூட்டத்தில் பேசும்போது, "இஸ்ரேவேலை அங்கீகரிப்பதாகவும் வன்செயல்களைக் கைவிடுவதாகவும் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

அதைத் தொடர்ந்து அமெரிக்கா, ருனிசியாவின் தலைநகர் ருனிஸில் உள்ள அமெரிக்கத் தூதர் மூலம் முதல் முறையாக பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகளுடன் மூன்று மாதங்களுக்கு முன்னர் பேச்சுக்களை ஆரம்பித்து.

அப்பேச்சுக்கள் இன்னும் தொடருகிறது.

இந்த நிலையில் அமெரிக்காவின் எச்சரிக்கை நேற்று விடப்பட்டது.

லெபனனில் இருந்து பலஸ்தீன கெரில்லாக்கள் இஸ்ரவேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது தெரிய வந்ததாகக் கூறப்படுவதைத் தொடர்ந்தே அமெரிக்காவின் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா தனது எச்சரிக்கையில் கூறியிருப்பதாவது'

பலஸ்தீன விடுதலை இயக்கத்துடனான பேச்சுக்கள் அறிக்கைகளின் அடிப்படையில் தான் (Basis of Statement) ஆரம்பிக்கப்பட்டது. பேச்சுக்கள் தொடருவது (Basis of Performance) செயல்பாட்டினைப் பொறுத்துத் தான் இனி அமையும்.

இப்படி எச்சரிக்கையில் கூறப்பட்டுள்ளது. (எ)

## புளோரன்ஸ் ஓய்வு பெறுகிறார்

வாஷிங்டன், பெப் 27

உலகின் அதிவேக ஓட்ட வீராங்கனை புளோரன்ஸ் ஜோய்னர் விளையாட்டுத்துறையில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்திருக்கிறார்.

கடந்த ஒலிம்பிக்ஸ் போட்டியில் 100 மீற்றரை 10 வினடிகளில் ஓடி உலகின் அதிவேக ஓட்ட வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார். [எ]

## டோக்கியோவிலும் திருவுளச் சீட்டு

டோக்கியோ பல்கலைக் கழகத்தின் தலைவராக பேராசிரியர் அகிற்றோ அரிமா திருவுளச் சீட்டு மூலம் தெரிவுசெய்யப்பட்டார்.

இப்பல்கலைக் கழகத்தின் நூறு ஆண்டுகள் சரித்திரத்தில் ஒரு தலைவர் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு செய்யப்பட்டது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

24 ஆவது தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பேராசிரியர் அரிமாவுக்கும் அவருடன் போட்டியிட்ட பேராசிரியர் நாகயோ ஹோமாவுக்கும் தலா 586 வாக்குகள் கிடைத்தன.

## தமிழ்க் குடிமகன் கருத்து

சென்னை, பெப். 27

தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் திரு. தமிழ்க்குடிமகன் தி.மு.க பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளமாட்டார்.

முதலமைச்சர் கருணாநிதியுடன் கலந்து பேசி இம்முடிவை எடுத்திருப்பதாக திரு. தமிழ்க்குடிமகன் தெரிவித்தார்.

திரு. தமிழ்க்குடிமகன் இளையான் குடித்தொகுதியில் தி மு. க வேட்பாளராக இவர் வெற்றி பெற்றார். (எ)

### பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்படின்

## சத்தியமாகக் குடிக்க மாட்டேன் ஜோன் ரவர் பகிரங்கமாக அறிவிப்பு

வாஷிங்டன், பெப். 27

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தனது பாதுகாப்பு அமைச்சராக திரு ஜோன் ரவர் என்பவரைத் தெரிவு செய்தார்.

அவரின் நியமனத்தை அமெரிக்க செனட்டின் ஆயுதக் கமிட்டி அங்கீகரித்த பின்னரே திரு ரவர் பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஏற்க முடியும்.

ஆனால் ஆயுதக் கமிட்டி அவரது நியமனத்தை ஏற்க முடியாது என்று 11 - 9 வாக்குகளால் தீர்மானித்தது.

திரு ரவர், மிதமிஞ்சிய குடிகாரர், பெண்கள் விஷயத்தில் பலவீனமானவர் என்று கூறியே ஆயுதக் கமிட்டி அவரின் நியமனத்தை நிராகரித்தது.

அச்சமயம் ஜப்பான் சென்றிருந்த அதிபர் புஷ் அங்கிருந்தபடியே'

"பாதுகாப்பு மைச்சர் பதவிக்கு திரு. ரவரைத் தவிர சரியான ஆட்கள் என்னிடம் இல்லை" - என்று பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இப்படி அவரது நியமனம் இழுபறிப்பட்டு வந்த நிலையில் நேற்று (ஞாயிறு) திரு. ஜோன் ரவர் டெலிவிஷன், வானொலி மற்றும் பத்திரிகைகளுக்கு மனம்விட்டுப் பேட்டி ஒன்றை அளித்தார்.

அப்போது அவர் சொன்னதாவது;

1970களில் நான் மிதமிஞ்சிய குடிகாரராக இருந்தது உண்மைதான்:

நான் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்படின் நான் குடிப்பதையே விட்டு விடுவேன்.

நான் சத்தியம் செய்கின்றேன்:

பியர், வைன் மற்றும் ஸ்பிரிட் வகைகளை நான் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டால் தொட்டுக்கூடப் பார்க்க மாட்டேன். இது சத்தியம். பாதுகாப்பு அமைச்சர் பதவி வகிக்கும் காலம்வரை இச்சத்தியத்தின்படியே நடப்பேன்"—

இப்படி திரு. ரவர் சொன்னார்.

அமெரிக்க செனட் ஆயுதக் கமிட்டி திரு. ரவரின் நியமனத்தை அங்கீரிக்கும் என்று அதிபர் புஷ் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். (எ)

## அதிகரிக்கும் சனத்தொகை ஐ.நா. எச்சரிக்கை?

ஐ. நா, பெப். 27

உலகின் சனத்தொகை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மிக வேகமாக அதிகரித்து வருவதாக ஐ நா சனத்தொகை நிதியம் [UN Population Fund] எச்சரித்திருக்கிறது

நிதியத்தின் தலைவர் நபிஸ் சாதி சனத்தொகை ஆணைக்குழுவுக்கு சமர்பித்த அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

★ மிக விரைவில் உலகின் சனத்தொகை 600 கோடியாகிவிடும்.

★ 2010 ஆவது ஆண்டில் இன்னொரு 100 கோடியால் சனத்தொகை அதிகரிக்கும்.

★ 2010 ஆவது ஆண்டில் இருந்து மேலும் 12 ஆண்டுகளில் சனத்தொகை 800 கோடியாகி விடும்,

★ தற்போதைய அதிகரிப்பு வேகம் தொடருமானால் இன்னும் நூறு ஆண்டுகளில் உலக சனத்தொகை ஆயிரம் கோடியாக இருக்கும்.

★ 800 கோடியுடன் மக்கள் அதிகரிப்பை கட்டுப்படுத்தாவிட்டால் அடுத்த நூற்றாண்டில் 140 கோடி மக்கள் பூமியில் வறுமையில் வாழ்வர்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தமிழக இல்லத்தில் எம்.ஜி.ஆர் படம் மீண்டும் வைக்க கலைஞர் உத்தரவு

புதுடில்லி, பெப் 27

புதுடில்லியில் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு இல்லம் இருக்கிறது

இங்கு ஜனாதிபதி வெங்கட்ராமன், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் படங்களுக்கு அருகே மறைந்த முதலமைச்சர் எம். ஜி ஆரின் படமும் வைக்கப்பட்டிருந்தது

முதலமைச்சராக திரு கருணாநிதி பதவி ஏற்ற மறுநாள் எம் ஜி ஆரின் படம் அகற்றப்பட்டது. அண்மையில் புதுடில்லி சென்றிருந்த முதலமைச்சர் கருணாநிதியின் கவனத்துக்கு இது கொண்டு வரப்பட்டது.

அகற்றப்பட்ட எம். ஜி ஆர் படத்தை மீண்டும் தொங்கவிடும்படி திரு. கருணாநிதி உத்தரவிட்டார்.

அவர் அப்போது சொன்னதாவது:

நான் ஏழு ஆண்டுகள் முதலமைச்சராக இருந்திருக்கிறேன். எனது படமும் தமிழ்நாடு இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் அ. தி. மு க. அரசு வந்ததும் என்னுடைய படம் அகற்றப்பட்டு அந்த இடத்தில் ... வைக்கப்பட்டது.

இப்படி திரு கருணாநிதி சொன்னார். (எ)

### ஆப்கனிஸ்தான்

## கெரில்லா அரசை அங்கீகரிக்க பாக்.பிரதமர் பெனஸிர் மறுப்பு

இஸ்லாமபாத். பெப். 27

ஆப்கனிஸ்தான் கெரில்லாக்கள் அமைத்துள்ள இடைக்கால அரசாங்கத்தை அங்கீகரிக்கப் போவதில்லை என்று பாகிஸ்தான் அறிவித்து விட்டது.



பெனஸிர்

பிரதமர் பெனஸிர் பூட்டோ நேற்று செய்தியாளர் மாநாட்டில் இந்த முடிவை அறிவித்தார்.

கெரில்லாக்கள் அரசாங்கத்தை அங்கீகரிப்பதற்கு காலம் இன்னும் கனியவில்லை என்று திருமதி பெனஸிர் மேலும் தெரிவித்தார்.

ஆப்கன் கெரில்லாக்கள் ... இடைக்கால அரசு உலக ... பெறுவதற்குத் தேவையான தகுதிகள் சிலவற்றை இன்னும் பெறவில்லை என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது. இதனிடையில் இடைக்கால அரசை அங்கீகரிக்கும்படி ஆப்கன் கெரில்லாக்கள் அமைப்பு விண்ணப்பித்துக் கொண்டுள்ளது.

இந்த இடைக்கால அரசில் பாகிஸ்தானில் இருந்து இயங்கும் கெரில்லா அமைப்புக்களின் பிரதிநிதிகளே அங்கம் வகிக்கின்றனர் ஈரானில் இருந்து இயங்கும் கெரில்லா அமைப்புக்கள் இதில் இடம் பெறவில்லை. (எ)

## புஷ்ஷின் விருந்தில் பங்குபற்ற சீனப் பிரமுகருக்குத் தடை

பீகிங், பெப். 27

பீகிங்கில் அமெரிக்கப் பிரஜைகள், அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு அளித்த விருந்தில் கலந்து கொள்ள வந்த சீன அரசு அதிருப்தியாளர் ஒருவரை பொலிஸார் வீதியில் வைத்து மறித்து திருப்பி வீட்டுக்கு அனுப்பினர்.

அவருக்கு திரு. புஷ் சார்பில் அழைப்பு அனுப்பப்பட்டு இருந்தது.

அழைப்பை ஏற்று திரு. லின் - யி வந்த போதே இச்சம்பவம் இடம் பெற்றது.

உடனே இது விஷயம் திரு புஷ்ஷின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இது போன்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் சீனாவில் இடம் பெறுவதாகவும் இவை பற்றி சீன அரசுடன் தொடர்பு கொள்ளும்படியும் திரு. புஷ் கேட்கப்பட்டார்.

திரு புஷ் இச்சம்பம் பற்றி வருத்தம் தெரிவித்தார்.

திபெத்தில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் பற்றி திரு புஷ் சீனத்தலைவர்களுடன பேசவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)

### தடை

பிரிட்டிஷ் எழுத்தாளர் ருஷ்டி எழுதிய 'சாத்தான் கவிதைகள்' நூலுக்கு இந்தோனேஷியாவும் மலேசியாவும தடை விதித்தன.

இந்தநூல் இஸ்லாம் மதத்தை நிந்தனை செய்வதாக அமைந்திருப்பதாக முஸ்லிம் அறிஞர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ)

## சீக்கிய தீவிரவாதிகள் பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை

பிரதமர் பெனஸிர் பூட்டோ தலைமையிலான புதிய அரசு இந்தியாவுடன் நல்லுறவுகொண்டு வருவது சீக்கியத் தீவிரவாதிகளிடையே அதிருப்தி ஏற்படுத்தி இருப்பதாக பாகிஸ்தான் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன.

அதிருப்தியடைந்த சீக்கியத் தீவிரவாதிகள், பாகிஸ்தானின் முக்கிய பகுதிகளைத் தாக்கப் போவதாக பயமுறுத்தல் விடுத்துள்ளனர் என்றும் —

அதன் காரணமாக பாகிஸ்தான் அரசு பாதுகாப்பு நடவடிக்கைகளை உஷார்படுத்தியுள்ளதாகவும் இச்செய்திகளில் தெரிவிக்கப்பட்டது. (எ)

## ஈரான் கேட் ஊழல் வழக்கு விசாரணை ஆரம்பமானது

வாஷிங்டன், பெப் 27

ஈரான்கேட் என்று அழைக்கப்படும் ஊழல் வழக்கு விசாரணை வாஷிங்டன் நீதிமன்றத்தில் ஜூரிமார் முன்னிலையில் ஆரம்பமானது

றொனல்ட் றேகன் அதிபராக இருந்த சமயம் வெள்ளைமாளிகையில் உயர் அதிகாரியாக பணிபுரிந்த கேர்ணல் ஒலிவர் நோர்த் மீது இவ்வழக்கில் 12 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

ஈரானுக்குச் சட்ட விரோதமாக ஆயுதங்களை விற்றது. அதன் மூலம் கிடைத்த பணத்தை நிக்கரகுவாவில் அரசுக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபடும் கொன்ருகிளர்ச்சியாளருக்கு வழங்கியது ஆகிய குற்றச்சாட்டுக்களே பிரதானமானவை.

அரச வழக்கறிஞர் விசாரணையைத் தொடக்கி வைத்தார்.

கேர்ணல் ஒலிவர் நோர்த் ஈரான் தொடர்பு பற்றி பொய் சொன்னார். அரசுப் பணத்தை தவறுகப் பயன்படுத்தியிருக்கிறார். —இப்படி அரச வழக்கறிஞர் சொன்னார்.

எதிர் தரப்பு வழக்கறிஞர். பிரென்டன் சலிவன் வாதாடுகையில், ஈரானுக்கு ஆயுதம் விற்றது; அதனால் கிடைத்த பணத்தை கொன்ருகிளர்ச்சியாளருக்கு வழங்கியது— அனைத்தும் தேசநலன் கருதி மேற்கொள்ளப்பட்டன.

நாட்டின் அதி உயர்ந்த தலைவரின் ஆணைப்படி எதிரி செயற்பட்டார்—என்று தெரிவித்தார்.

இதேவேளை, டெலிவிஷன் பேட்டி ஒன்றில், முன்னள் அதிபர் றேகன் ஈரான் கேட் ஊழல் தொடர்பாக பொய் சொல்லும் படி என்னைப் பணித்தார்" என்று கேர்ணல் நோர்த் சொன்னார் (-எ)

## சுழலும் உலகில்

### ஸ்பெயினில் சூறாவளி

மாட்ரிட், பெப் 27

ஸ்பெயினில் நேற்று வீசிய சூறாவளியில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியாவின் கப்பல் ஒன்று துறைமுகம் ஒன்றில் மூழ்கியது. பல சடலங்கள் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### மத்திய அரசை நம்பும் கலைஞர்

சென்னை, பெப். 27

தமிழ்நாடு திறைசேரி தான் காலியாக உள்ளது.

ஆனல் மத்திய அரசின் உள்ளம் காலியாக இருக்காது என்று நம்புவதாக முதலமைச்சர் கருணாநிதி சென்னை உமறுப்புலவர் பேரவை நடத்திய விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மத்திய அரசு போதிய நிதி உதவியை எனது அரசுக்கு வழங்கும்என்று நம்புவதாகவும் அவர் சொன்னார். (எ)

### ராஜீவின் அவஸ்தை

புதுடில்லி பெப் 27

தமிழ்நாடு தேர்தல் கொடுத்த அதிர்ச்சியில் இருந்து பிரதமர் ராஜீவ் காந்தி இன்னமும் மீளவில்லை என்று ஜனதா தள் தலைவர் விஸ்வநாத் பிரதாப் சிங் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் அமைத்த தேசிய முன்னணி கொள்கையற்ற ஒன்று என பிரதமர் காந்தி தெரிவித்த குற்றச் சாட்டுக்கு திரு. வி. பி. சிங் பதிலளித்தார்.

அப்போது அவர் மேலும்சொன்னதாவது'

தமிழ் நாடு தேர்தலில் தி மு.க. அடைந்த பெரிய வெற்றியினல் பிரதமர் காந்திக்குஇரவுகளில் நித்திரையேவருவதில்லை என்று தெரிகிறது

தேசிய முன்னணியிடம் திட்டவட்டமான கொள்கை உண்டு.

இப்படி திரு சிங் சொன்னார். (எ)

### சீனவில் தடை

பீகிங், பெப் 27

வெளிநாட்டுச் செலாவணியை மிச்சம் பிடிப்பதற்காக சீன, சிகரெட் மற்றும் மதுபான வகைகள் இறக்குமதிக்குத் தடை விதித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோண்சன் ✱ JOHNSON
வெளியிணை இயந்திரங்களையும்
உதிரிப்பாகங்களையும்
மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
மற்றும்
ரோலர், மடிநூல் ஃபிலிலி மீற்றர்,
வலை, தூக், போயா ஆகியவற்றையும்
எம்மிடம் வாங்கலாம்.
சென்; அன்ரனீஸ்,
63, யூதாததேயூ வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

# உதயன்

28 02 1989 செவ்வாய்க்கிழமை


வாடிக்கையாளர்களுக்கு
✱ ஜோண்சன் (H P.10)
வெளியிணை இயந்திரங்களை
இப்பொழுது
எமது குருநகர் ஸ்தாபனத்தில்
செற்ப அளவும்
'ஃபிரீனார்' பிளாஸ்டிக்படகும்
கையிருப்பு உண்டு!
உடனடியாகத் தொடர்பு
கொள்ளுங்கள்
சென். அன்ரனீஸ்,
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

# இ. தொ. காவின் தோல்விக்கு யாழ்ப்பாணத்தவரே காரணம்!

## தொண்டாவின் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப் 28

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோல்வி அடைந்ததற்கு யாழ்ப்பாணத்தவரே காரணம் என்று காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான திரு எஸ் தொண்டமான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து மலையகத்தில் பணிபுரியும் தமிழ் ஆசிரியர்களும், சமூகசேவையாளரும்தான் எமது ஆதரவாளர்களை இ தொ காவிற்கு எதிராகத் திருப்பி விட்டனர் — என்று திரு எஸ் தொண்டமான் சொன்னார்.

நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இ தொ கா வேட்பாளர்கள் வெற்றி பெறுதற்குரிய காரணங்கள் பற்றி தெரிவித்தபோது அமைச்சர் தொண்டமான் முன்கண்டவாறு குற்றஞ்சாட்டினர்,

அமைச்சர் மேலும் சொன்னதாவது:-

ஜனநாயக மக்கள் விடுதலைமுன்னணிவேட்பாளராக நுவரெலியாவில் போட்டியிட்ட திரு சந்திரசேகரன் எமது உறுப்பினராக இருந்தவர் இ தொ காவிடம் திரு சந்திரசேகரன் நியமனம் கேட்கவேயில்லை; கேட்டிருப்பின் நிச்சயம் கிடைத்திருக்கும்.

ஆனால் அவர் தவறாக வழிநடத்தப்பட்டார்

தோட்டப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான தமிழ் ஆசிரியர், சமூக சேவையாளர் உள்ளனர் அவர்கள் எம்மீது, எமது மக்கள் அவநம்பிக்கை கொள்ளத் தூண்டிவிட்டனர்.

தேர்தல் தோல்வியினால் எமது மக்கள் கவலையடைந்தாலும் புத்திசாலிகளாகி விட்டனர்

கொஞ்ச ஆதரவாளர் தான் எமக்கு எதிராகத் திரும்பி விட்டனர் என்பதில் எனக்குநிம்மதி

வருகிற ஜூன் மாதத்தில் பிரச உரிமைபெற்ற எம்மக்கள் அனைவருக்கும் வாக்குரிமையும் கிடைத்துவிடும். அப்போது எமதுபலம் உணரப்படும் —என்று திரு தொண்டமான் தெரிவித்தார்

(அ-எ)

## சர்ச்சைக்குரிய நூல்

## முஸ்லிம் காங்கிரஸ் கொமேனிக்கு ஆதரவு

கொழும்பு, பெப் 28

லண்டன் எழுத்தாளர் சால்மன்ருஷ்டி ஈமரண தண்டனை விதித்தக்குரான் ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லாக் கொமேனியின் செயலை ஆதரித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிக்கைவெளியிட்டிருக்கிறது

'சாத்தானின் கவிதைகள்' நூல் இஸ்லாத்தை எள்ளிநகையாடி களங்கப்படுத்தும் நூலாகும். உலக இஸ்லாமியர்களின் உணர்வுகளை அந்த நூல் புண்படுத்தியுள்ளது

அல்லாஹ்வின் தொண்டர்களை, மக்களை இறைதூதர் திருநபியை புனிதகுர் ஆனை அவமதிப்பவர்கள் யாராக இருப்பினும் அவர்களைக்கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கை வலியுறுத்தி இருக்கிறது.

நாலுக்குக்கண்டனமும் நூலாசிரியருக்கு மரண தண்டனையை விதித்திருக்கு ஆயதுல்லாவின் உத்தரவைத் தட்டிக்கேட்பதும் விமரிசிப்பதும் கூடாது —என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

(அ-எ)

# தபாற் பிரிவுகள் ஒன்றாக இணைக்கப்படும்

யாழ்ப்பாணம், பெப் 28

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இயங்கும் தபால் அத்தியட்சகர் பிரிவுகள் ஒன்றாகச் சேர்க்கப்படும்

வடகிழக்கு மாகாண சபையின் கீழ் மேற்படி புதிய பிரிவு கொண்டு வரப்படும் என்றும்-

இதற்குப் பொறுப்பாக கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படலாம் என்றும் அறிய வருகிறது

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் தபால் சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்கான வாய்ப்பு இதன் மூலம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஓ-10)

## மீன்பிடி....,

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தாபன வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் - மீன்பிடிச் சங்கங்களின் ஊடாக — இலகு தவணைக் கடன் அடிப்படையில் இந்த உபகரணங்கள் வழங்கப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-5)

## தேசிய கவுன்ஸிலில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் சமாதானமான சூழ்நிலையில், ஜனநாயகரீதியிலான அரசியல்வாழ்வை மேற்கொள்ளத்தொடங்கிய இன்றைய காலகட்டத்தில் எமது மக்களின் நீண்டகால இலக்குகளையும்சகல மக்களும் நிரந்தரமான அமைதியான சமாதானமான சமூக வாழ்வையும் கருத்திற்கொண்டு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய அனைத்துப் பிரிவின கருத்துக்களையும் பிரதிபலிக்கக்கூடியதான தேசிய கவுன்சிலொன்றை நிறுவுவதே எமதுநோக்கமாகும்.

### திம்புவில்

1985ஆம்ஆண்டு திம்பு பேச்சுவார்த்தை நடைபெற்ற காலங்களில் ஈழ தேசிய முன்னணியில் அங்கம் வகித்த இயக்கங்களான தமிழ்ஈழவிடுதலை இயக்கம் (ரெலோ, தமிழீழ விடுதலைப் புலிகள் (எல், ரி. ரி. ஈ). ஈழப்புரட்சிகர அமைப்பு (ஈரோஸ்), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ பி. ஆர். எல்; எவ்). ஆகிய இயக்கங்களிடையே ஒரு இணக்கம் காணப்பட்டு, குறிப்பிட்ட தேசியக் கவுன்சில் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், பின்னர் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக அம்முயற்சிகள் கைவிடப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இன்றைய சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள பல்வேறு விடுதலை இயக்கங்களும், ஏனைய பொது ஸ்தாபனங்களும் கட்சிகளும் தமக்கிடையேயான முரண்பாடுகளை மறந்து நடந்துமுடிந்த தேர்தல்கள் மூலம் மக்கள் வெளிப்படுத்திய அபிலாசைகளின் அடிப்படையில், ஒருமித்து குரல்கொடுக்க வேண்டும் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது

அத்துடன் வடக்கு கிழக்கு மாகாண சபையினை பலப்படுத்தி செயற்படுத்தவும், நாடாளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை ஒருமித்த குரலில் ஓங்கி ஒலிக்கச் செய்யவும் இந்த கவுன்சில் பயனுள்ளதாக அமையும் என நம்புகின்றோம்.

### நம்பிக்கை தருகிறது

இத்தகைய அமைப்பினை உருவாக்குவது தொடர்பான நடந்து முடிந்துள்ள பேச்சுவார்த்தைகள் எமக்கு நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. இம்முயற்சியைப் பூரணப்படுத்தி தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதில்சகலரும் பங்கு கொள்ள வேண்டுமென விரும்புகின்றோம்

இதேவேளையில் தமிழ் பேசும் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளில் ஒன்றான வடக்கு, கிழக்கு இணைப்பை ஸ்திரப்படுத்தும் வகையிலும் முஸ்லிம் மக்களுடனான உறவை பலப்படுத்தும் வகையிலும் முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, மற்றும் முஸ்லிம் மக்களின் நலன்களுக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புக்கள் எல்லாவற்றுடனும் பேச்சுவார்த்தை நடத்தி இக்கவுன்சிலிலும் இணைக்கவுள்ளோம்.

இத்தகைய ஒரு கவுன்சிலை அமைப்பதற்கு தமிழ் பேசும் மக்களின் நலன்களில் அக்கறையுள்ள சகலதரப்பினரும், குறிப்பாக வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்களும், தங்களது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் தரவேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம் — இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

(அ)

## காணவில்லை

முக்கிய தஸ்தாவேஸ்துக்கள் அடங்கிய என்பலப் 26 - 02 - 1989 அன்று மந்திகையில் உள்ள சிலைக்கு அருகாமையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள், தயவுசெய்து, வேலவன் ஸ்ரோஸ், பருத்தித்துறையில் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(9598)

# இ.தொ.கா. தேசிய மாநாடு 3 மாதங்களுக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப் 28

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய மாநாடு மூன்று மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது

வருகிற மாதம் 11, 12 ஆம் திகதிகளில் மாநாடு நடத்தப்படுவதாக இருந்தது

இதனிடையில், இ தொ. காவின் நிர்வாகத்தை தலைவர் எஸ் தொண்டமானும் செயலாளர் எம் எஸ் செல்லச்சாமியும் நேரடியாக நடத்துவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உதவிச் செயலாளர்கள், பொதுசனத் தொடர்பு அதிகாரிகள் அனைவரையும் பதவி துறக்கும்படி இ. தொ கா. தலைமைப்பீடம் உத்தரவிட்டுள்ளது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் இ. தொ. காவுக்கு எதிர்பார்த்த வெற்றி கிட்டாமற் போனதைத் தொடர்ந்தேமுன்கண்ட புனரமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன

(ஓ-எ)

## இளைஞர் பலி

பச்சிலைப்பள்ளி பெப், 28

புலோப்பளைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் மரணமானதாகவும், மற்றொருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஓ 117)

## அ'புர---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லங்களாக மீட்கப்படுவதும் அனுராதபுரத்தில் அதிகரித்து வருவதாக மனித உரிமைகள் பாதுகாப்புக் குழு அறிவித்து உள்ளது.

(ஓ-7)

## கேதீச்சரத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் செல்வதற்கான கேரதீவு - சங்குப்பிட்டி கடல் மார்க்கப் பாதையூடாக வாகனங்கள் பேய் வருவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

சுகாதார வசதிகளை மன்னார் சுகாதார அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

(ஓ-எ)

## பெரியாஸ்பத்திரிகளில் மட்டுமே இனிப் பென்சிலின் ஊசி?

கொழும்பு, பெப்ரவரி 28

பென்சிலின் ஊசி மருந்து இனிமேல் பெரிய ஆஸ்பத்திரிகளில் வைத்துத்தான் நோயாளர்களுக்கு செலுத்தப்படும்

சிறு மருத்துவ மனைகளில் வைத்து இந்த ஊசிமருந்து ஏற்றப்படமாட்டாது

பென்சிலின் ஊசிமருந்து போடப்படுவதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு மாற்றுச் சிகிச்சை அளிக்கக் கூடிய வசதிகள் சிறிய மருத்துவமனைகளில் கிடையா.

பெரிய ஆஸ்பத்திரிகளில்தான் அவை இருக்கின்றன.

கொழும்பில் உள்ள மருத்துவமனை ஒன்றில் பென்சிலின் ஊசிமருந்து ஏற்றப்பட்ட ஒரு நோயாளி அடுத்த நிமிடமே மரணம் ஆனார்.

அதைத் தொடர்ந்தே சுகாதார அமைச்சு கடந்த வாரம் முன்கண்ட முடிவை எடுத்தது.

பென்சிலின் ஊசிமருந்து ஏற்றப்பட்டவுடனேயே உயிரிழந்த முதலாவது நபர் இவர்.

கடந்த 6 மாதங்களில் இப்படி உயிரிழந்தவர்களில் இவர் ஆறுவது நபர் ஆவார்.

[ஓ-எ]

# காங்கேசன், மன்னார் துறைமுகங்கள் அபிவிருத்தி

கொழும்பு பெப் 28

காங்கேசன்துறை, தலைமன்னார் துறைமுகங்களை அபிவிருத்தி செய்யவிருப்பதாக வர்த்தக, கப்பற்றுறை அமைச்சர் ஜனப் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் ஜனப் அபூபூசுப் நேற்று அமைச்சர் மன்சூரை இது சம்பந்தமாக சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

(ஓ-எ)

## மாணவன் கைதாகி விடுவிப்பு

வல்வெட்டித்துறை பெப் 28

உடுப்பிட்டி, இலக்கணாவத்தையில் ஜி சி. ஈ. பரீட்சை எழுதும் மாணவர்ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டு அன்று விடுவிக்கப்பட்டார்.

வல்வைப் பிரசைகள் குழு எடுத்த முயற்சியை அடுத்தே மாணவன் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

(ஓ-160)

## நகைகள் கொள்ளை

கொழும்பு பெப் 28

இராணுவச் சீருடை அணிந்த இளைஞர் கோஷ்டி ஒன்று மவுண்ட்லவேனியாவில் உள்ள வெதிந்த என்னுமிடத்தில் வீடு ஒன்றினுள் பலாத்காரமாகப் புகுந்து நகைகளைக் கொள்ளை இட்டது

துப்பாக்கிகளைக் காட்டிப் பயமுறுத்தியே இக் கொள்ளை நடத்தப்பட்டதாம்

(ஓ எ)

## கோல்வின்,.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விளங்கினர்.

1942 இல் இவர் சிறையிலடைக்கப்பட்டபோது சிறையில் இருந்துதப்பித்துச் சென்றார்.

நாட்டின் முதலாவது நாடாளுமன்றப்பொதுத் தேர்தல் 1947 இல் நடந்தது

அப்போது டாக்டர் டி சில்வா, வெள்ளவத்தை கல்கிசை தொகுதி எம் பியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

1970 இல் ஐக்கிய முன்னணி அரசில் பெருந்தோட்டத் தொழில் துறை அமைச்சராகப் பணிபுரிந்தார்.

1972 இல் அரசியல் விவகார அமைச்சர் என்ற முறையில் முதலாவது குடியரசுக்கான அரசியல் யாப்பைத் தயாரிப்பதில் முனின்று உழைத்தார்.

1982 இல்நடந்த ஜனாதிபதித்தேர்தலில் டாக்டர் டி. சில்வா போட்டியிட்டார்.

வருகிற மாதம் 9 ஆம் திகதி அங்குரார்ப்பணஞ் செய்யப்படவுள்ள 9 ஆவது நாடாளுமன்றத்திற்கு ஐ சே முன்னணியின் தேசியப்பட்டியல் மூலம் எம் பியாக நியமிக்கப்பட்டார்.

எம் பியாகப் பதவி ஏற்கு முன்னரே அவர் நேற்றுக் காலமானார்.

(எ)

## குண்டுச்சத்தமும் வேட்டுக்களும்

வல்வெட்டித்துறை பெப், 28

பருத்தித்துறை நவீன சந்தைக்குச் சமீபமாக கடந்த ஞாயிற்றுக்கிழமைஇரவு சுமார்8.30 மணியளவில் குண்டு ஒன்று வெடித்த சத்தம் கேட்டது. அதை அடுத்து தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன மக்கள் பீதியுடன் இரவைக் கழித்தனர். சேதம் ஏற்பட்டவில்லை எனத்தெரிவிக்கப்பட்டது.

(ஓ-160)

# இடம் பெயர்ந்தோருக்கு மேலும் 125 வீடுகள்!!

## ஐ.நா. ஸ்தானிகராலயம் அமைக்கும்

யாழ்ப்பாணம் பெப், 28

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தினால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் மேலும் 125 வீடுகள் மார்ச் மாதத்தில் அமைக்கப்படவுள்ளன

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன

இராணுவநடவடிக்கைகளினால், வீடுகளை இழந்து உள்நாட்டிலும் இந்தியாவிலும் இடம் பெயர்ந்தோருக்கு அகதிகளுக்கான, ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் வீடுகள் அமைத்துக் கொடுத்துவருகிறது.

முதல் கட்டமாக 25 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக தற்போது நூறு வீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன. மூன்றும் கட்டமாகவே மேற்படி 125 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

(உ 5)

## இடம்மாற்றம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். பிரிவு அலுவலகம் முதலாம் குறுக்குத்தெருவிலிருந்து கண்டிக்குளிக்கு (க சேரியடி) இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(ச)

## தேவை

யாழ் நகரில் பிரபலமான செய்தித்தாள் நிறுவனத்திற்கு G C E. சாதாரண தரம் வரை படித்தவரும் கடமை உணர்வும் நற்பண்புகளும் உள்ள இளவயதினரான ஒருவர் அலுவலகப் (Peon) பணியாளராகக் கடமையாற்ற உடன் தேவை

நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

யாழ் நகர எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

No. 33, C/o உதயன்.

(C-1617)

# மரண அறிவித்தல்கள்

## திரு. இன்னாசிமுத்து யேசுதாசன்

சிலாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இரணைப்பாலையில் வசிப்பருமாகிய இன்னாசிமுத்து யேசுதாசன் 24-02-89 அன்று அகாலமரணமடைந்தார்

இவர் காலம் சென்ற இன்னாசிமுத்து அன்னம்மாவின் அருமைப் புதல்வனும், றெஜினாவின் அன்புக் கணவரும், யூட், பாபுஜி, ஜென்சி, ஆர்னியின் அன்புத் தந்தையும், பிலோமினா, மல்லிகா, இராஜேஸ்வரி, அன்ரனி. பிரான்சிஸ், யேசுரட்ணத்தின் (ஜேர்மனி) அருமைச் சகோதரனும், செபமாலை, விமோதியனின் மைத்துனரும் வார்.

இவரின் நல்லடக்கம் இரணைப்பாலை சேமக்காலையில் 25-02-89 அன்று நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
சகோதரன்

சிலாலை,
பண்டத்தரிப்பு

(9661)

## செல்வன் பாலசிங்கம் சிவகுமாரன்

செல்வன் பா. சிவகுமாரன் 24-02-89 இல் ஜமேக்காவில் அகாலமரணமானார்.

இவர் யாழ் வைமன் வீதியில் வசிப்பவரும், புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர் திரு. V. S பாலசிங்கம், திருமதி சாரதாமணிதேவி அவர்களினது சிரேஷ்ட புதல்வனும், உமா (Watar Supply and Drainage, Jaffna), பவானி, முகுந்தன், மாலினி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), பாலகுமாரன் (Jamaica), முருகதாசன் (யாழ் பரியோவான் கல்லூரி), ஆகியோரின் அருமைத் தமையனும்,புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த காலம் சென்ற செல்லத்தம்பி, செல்லம்மா, புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலம் சென்றவர்கள் சிற்றம்பலம், செல்லமுத்து ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28 02-89) இல் ஜமேக்காவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
V. S. Balasingam.
8/1. Wyman Road,
Jaffna.

(9702)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 28-02-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Tuesday 28th February 1989.